J.M.C

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- பத்து **Registered as a News paper in Sri Lanka**

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 19 புதன்கிழமை (03.07.2002) தொலைபேசி 3378 ஒலி 196

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-2480

# தமிழ்ச்செல்வன், கேணல் சூசை உடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்திப்பு

## கடல்வலயம் குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி நிருபர்)

**நோர்வேயின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே தலைமையிலான குழு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோரை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து சுமார் 3மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.**


கண்காணிப்புக்குழுத் தலைவர் கேணல் சூசைக்கு கைலாகு கொடுக்கிறார்

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்தி மூலம் நேற்றுக்காலை 8.45மணிக்கு கிளிநொச்சி மத்திய மைதானத்தை வந்தடைந்த கண்காணிப்புக்குழுவினரை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த புலித்தேவன், தங்கன் ஆகியோர் வரவேற்று கிளிநொச்சி அரசியல்துறை நடுவப் பணியகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொணட் பியூறு ஹெவ்டே அதன் துணைத்தலைவர் ஹாவ் லாண்ட், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுச் செயலாளர் பீற்றர் மற்றும் புலிகளின் கண்காணிப்புக் குழுத்

(10ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று மாபெரும் கண்டனப்பேரணி

### பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் வேலணையில் தாக்கப்பட்ட சம்பவம் மற்றும் மூதூர் வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் உட்பட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற அரசு தவறியமை ஆகியவற்றைக் கண்டித்து நேற்றுக் கிளிநொச்சியில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இக்கண்டனப் பேரணி கிளிநொச்சி மாவட்ட மனித நேய அமைப்புக்களினால் ஏற்பாடு

(10ம் பக்கம் பார்க்க)

## "புலிகளின் குரல்" ஏற்பாட்டில் கரும்புலிகள்தின எழுச்சி நிகழ்வு

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் வானொலியின் ஏற்பாட்டில் யூலை 5ம் திகதி கரும்புலிகள் தினம் மாபெரும் எழுச்சி விழாவாக கிளிநொச்சி நகரில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளதுடன் பரதசூடாமணி செல்வி பேரின்பநாயகி சிவகுரு அவர்களின் நட்டுவாங்கத்தில் நடனம், ஆசிரியை பேபி அவர்களின் நெறியாள்கையில் உருவான சங்க நாதம், புலிகளின் குரல் கலைஞர்கள் பங்குகொள்ளும் நாடகம், நா.யோகேந்திரநாதனின் 'ஒரே ஒரு சாவு' ஆகிய கலை நிகழ்வுகளுடன் புலிகளின் குரல் இசையமைப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் அரசியல் பணிமனை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகம் நெடுந்தீவு 10ம் வட்டாரத்தில் நாளை வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. (த-250)

### சட்டவிரோத விமானப் பாகங்கள்

## விசாரணை நடத்த இந்தியா பயணம்

(கொழும்பு)

விமானத்தின் பாகங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள மூன்று பேர் கொண்ட இரகசியப் பொலிஸ் குழு

## வடக்குக் கிழக்கில் 200 இராணுவ

## ஊர்காவற்றுறை

# வடக்குக் கிழக்கில் 200 இராணுவ முகாம்களை அரசு மூடியுள்ளது

## ஜே.வி.பியின் குற்றச்சாட்டுக்கு படையினர் மறுப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டபின்னர் வடக்கிலும், கிழக்கிலுமிருந்து சுமார் 200க்கு மேற்பட்ட இராணுவ முகாம்களை அரசு மூடிவிட்டதாக ஜே.வி.பி கூறும் குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைசசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும், பொது இடங்களிலும் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட்ட போதும் அகற்றப்பட்ட முகாம்களுக்கு சமீபமாக புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய புதிய முகாம்கள் அமைப்பதற்கான நிதியை அரசு

(10ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறை கடற்கரையில் சடலம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கடற்கரைப் பகுதியில் ஆணின் சடலமொன்று நேற்றுக் காலை கரை ஒதுங்கியது. இது குறித்து பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலமாக மீடகப்பட்டவர் எழுவை தீவைச் சேர்ந்த அந்தோனிபபிள்ளை தொம்பிப்பிள்ளை என இனம்காணப் பட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

பட்டமை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள மூன்று பேர் கொண்ட இரகசியப் பொலிஸ் குழு ஒன்று இந்தியா சென்றுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## செங்கலடி-பதுளை வீதி திறக்க இணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செங்கலடி பதுளை நெடுஞ் சாலையை போக்குவரத்திற்காகத் திறப்பது தொடர்பாக அரச தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பிரதிநிதிகள்- இராணுவ அதிகாரிகள் மட்டக்களப்பில் நேற்றுச் சந்தித்துப் பேசினர்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர்களும் இராணுவ உயரதிகாரிகளும் நேற்று மட்டக்களப்பில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் பி.பகல் 1மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் விசு, சிறப்பு அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரும் படைத்தரப்பில் கிழக்குப் பிராந்திய இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், மட்டக்களப்பு மாவட்ட 23வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி டி.எல்.ஆர்.அன்ரனி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து அங்கு நிலவி வரும் பதற்றத்தைத் தணிக்கவும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையே சுமுகமான உறவை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் முழுமையாக அமுல்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப் பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் திருமலை- மட்டக்களப்பு ஆயர் மேதகு கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம் பிள்ளையும் கலந்து கொண்டார்.

சிறப்பு அரசியல்துறைப்பொறுப்பாளர் கரிகாலன் படை உயரதிகாரிகளுடன் சந்தித்து உரையாடியமை இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## விபத்தில் மாணவி காயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வைத்தியசாலைக்கு அருகாமையில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார்சயிக்கிள்-சயிக்கிள் விபத்தில் கல்வியியல் கல்லூரி மாணவி ஒருவர் தலையில் பலத்த காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-06)

## ஆசிரிய மாணவர் பயிற்சிக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்விப் பயிற்சி நெறிக்குத் தெரிவானவர்களை இன்று சமூகமளிக்குமாறு பலாலி ஆசிரியகலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார். (ந)

## சிறு விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

விரிவுரையாளர் மலர் சின்னையா அவர்களின் மழலை எழுச்சி ஒலிநாடா சிறுவர்களுக்கான 35பாடல்கள் (90) கசற்-விலை 300ரூபா ஏசவிநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் (5625)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய FD 125 (GS மொடல்) Cub 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு .தொடர்புக்கு: கேசவன் பாலமுரளி, மஞ்சத்தடி, இணுவில். (5617)

### தேவை

அலுவலக விடுதி ஒன்றை பராமரிப்பதற்கு ஆள்தேவை நேரில் சம்பளம் பேசப்படும் இல.140,பலாலி வீதி திருநெல்வேலி (பரமேஸ்வரா சந்தி அருகில்) தொலைபேசி இல-2478 (5633)

### தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு நீர்வேலி எனும் முகவரியை உடைய மீனாட்சி கந்தையா என்பவருடைய தேசிய அடையாள அட்டை வவுனியாபாஸ் என்பன கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில்தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (5629)

## நூல்கள் கொள்வனவு

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் நூல் நிலையத்திற்கு ஒரு இலட்சம்ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன•

விஞ்ஞான, தொழில்நுட்பம், பொருளாதாரம் சமயம்,சிறுகதை, நாவல்கள், கவிதைகள் அடங்கிய புத்தகங்கள் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (உ-23)

## தொலைபேசி இணைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் உள்ள இரண்டு உபதபாலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

சரம்பன் கிழக்கு உபதபாலகம், நாரந்தனை தெற்கு உபதபாலகம் ஆகிய வற்றுக்கே மோட்டறோலாதொலைபேசி இணைப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது. (ஷ-75)

# தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள் 13

பகுதி 1 இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்:

1. வி.தனுசன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
2. வி.தீபன்ராஜ், ஆனைப்பந்தி மெ.மி.வி
3. யோ.அசாத்,அளவெட்டி றோ.க.த. கவித்தியாலயம்
4. ச.ஜோண்சத்திய ரஞ்சித், உடுவில் மகளிர் கல்லூரி
5. பா. பிறேமசியா,உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
6. வே. ஜெயவதனி, வல்வை அ.மி.த.க பாடசாலை
7. ம. பிரதீபன், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
8. இ. துவாரகா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
9. க. சஜீபராஜ், வயாவிளான் மத்தியமகாவித்தியாலயம்
10. ச. ஏஞ்சலின் நிவேதிகா, உடுவில் மகளிர்கல்லூரி
11. பா.ஸ்ரீகுகன்,வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி
12. வா. நிலானி,உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
13. ம. அமிலன், நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை
14. இ துவாரகா கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதவித்தியாசாலை
15. அ. கீதன், பளை மத்திய கல்லூரி
16. ந. கௌசிகா, தும்பளை சிவப்பிரகாச ம.வி
17. ப. சோபியா,நெல்லியடி மெ.மி..த.க பாடசாலை
18. கு. சுமங்கலி,உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை
19. கு.சந்திரகுமாரி,வல்வை மகளிர் வித்தியாலயம்
20. பி. ஜோதிகா, வல்வை சிவகுரு வித்தியாசாலை
21. யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாசாலை
22. பு. கோபிநாத்,வல்வை சிவகுரு வித்தியாசாலை
23. ம. நிகிந்தன், மீசாலை வீரசிங்கம் ம.வி
24. த. பிரணாளன்,தம்பசிட்டி மெ மி த.க பாடசாலை
25. ப.குபேரன்,மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
26. சி. சிவராம், சென்ஜோன்ஸ் கல்லூரி
27. ந. திருமாறன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
28. நா. பிரகாஷ், ம.கா. வி
29. நி. பகீர்த்தன்,கோ.வ.றோ.க.த.க.பாடசாலை
30. ஜெ. தட்சாயினி, சங்குவேலி அ.த.க. பாடசாலை
31. பு. வினோஜா, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
32. இ. மணிமாறன்,வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
33. வ. நிரோஷான், சென்ஜோன்ஸ் கல்லூரி
34. வ. லக்ஸ்மன், மானிப்பாய் சென் ஆன்ஸ்ற்
35. ச. மீரா உ.சை.த.வி
36. சோ. சிந்துகேயன்,மத்திய கல்லூரி
37. சி.கீர்த்திகா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
38. சிந்துயன், ஏழாலை மகாவித்தியாலயம்.
39. க. வாகீசன், சென்ஜோன் பொஸ்கோ
40. ப.ஆரணி, தாவடி இந்து தமிழ் கலவன்பாடசாலை
41. மு. குணாதரன் துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
42. ச. சுணேஸ்பரன் கோப்பாய் நாவலர்வித்தியாலயம்
43. க. கபிலேஸ்வரி நாவாந்துறை றோமன்கத்தோலிக்கவித்தியாலயம்
44. க. தனுஷன் உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை
45. ப. சஞ்சீவன் உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை
46. வி. கிரிஜா நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை
47. ஸ்ரீ. சரண்யன் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
48. இ. நேசராஜ் கொக்குவில் இந்துஆரம்ப பாடசாலை
49. அ. அனுஸ்ரிகா உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
50. த. கோகுலன் நவாலி அட்டகிரி சைவவித்தியாலயம்
51. இ. கிரிசாந்தன் துன்னாலை மெ. மி. த. கலவன் பாடசாலை
52. தி. ஜிந்தூரகன் சென்ஜோன் பொஸ்கோ
53. செ. கௌதமி வ. இ. ம. கல்லூரி
54. பி. நந்தினி வ. ம. ம. வித்தியாலயம்
55. க. கீர்த்திகா துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
56. செ. சிந்துஜன் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
57. சு. சூர்யா உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை
58. க. கஸ்தூரி கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
59. ஜீ. கொன்சன் கற்கோவளம் மெ. மி.த. க.பாடசாலை
60. த. அபராஜினி கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்
61. ச. விஷ்வரூபன் வல்வை மகளிர் ம. வி
62. சி. அனுரன் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
63. த. வஜீதா மானிப்பாய் விவேகானந்தா பாடசாலை
64. ச. யதுகுலன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
65. கு. சென்போல் உரும்பிராய் றோ. க.த.க. பாடசாலை
66. யோ. சுதன்யா உரும்பிராய் றோ. க.த.க.பாடசாலை
67. ர. பிரியதர்சினி ச. சி. ம.
68. அ. துளசி உடுப்பிட்டி மகளிர்கல்லூரி
69. சி. ரணுசியா முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்
70. எம். ஜோன்பிரியந் சென்ஜோன்ஸ் கல்லூரி
71. சு. மைதிலி நெ. மெ. ம. மி. த. க. பாடசாலை
72. சி. சிந்துசகனா மாணிக்கவாசகர் வித்தியாலயம்
73. செ. அனுதர்சா நெ. மி. த. க. பாடசாலை
74. இ. உமைப்பிரியாசாவகச்சேரிஇந்து ஆரம்பப்பாடசாலை
75. சி மாதங்கி யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை
76. ஸ்ரீ. பிரவீணா யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை
77. செ. நிரோஜன் கோண்டவில் சீ. சீ. த. க. பாடசாலை
78. ப. சயந்தன் கோண்டவில் இந்துமகா வித்தியாலயம்
79. ப. லக்சனா சங்குவேலி அ. த. க பாடசாலை
80. கே. துவாரகன் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
81. த. துவாரகன் மாணிக்கவாசகர் வித்தியாலயம்
82. ரா. றொசாணி சந்திரிக்க உடுவில் மகளிர் கல்லூரி
83. ஜெ. நிவிதா யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை
84. இ. விதுசன் யாழ். மத்திய கல்லூரி
85. ப. விஷ்ணுயன் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
86. த. வராகினி கொக்குவில் சீ. சீ. த. க.பாடசாலை
87. க. நிறோஜா கொக்குவில் சீ சீ.த.க. பாடசாலை
88. ச. திபாகர் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
89. சௌ. ஸ்ரீஹர்ஷன் வடலூர் அரசினர் தமிழ்கலவன் வித்தியாலயம்
90. த. திஷா அச்சுவேலி மத்தியகல்லூரி
91. கு.தமிழ்மதி மேலைப்புலோலி சைவப்பிரகாசவித்தியாலயம்
92. தி. நகுல்றாஜ் மெ. மி. த. க. பாடசாலை
93. செ. ஜெகப்பிரியாசென்ஜோன்பொஸ்கோ
94. மு. குணாதரன் காசிநாதர் வித்தியாலயம்
95. ம. நிவந்தன்மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்
96. லி. நிரோசன் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
97. சி. சீராளன் வடடு. யாழ்ப்பாணக் கல்லூரி
98. பி. டியோனில்கூரே மானிப்பாய் சென் ஆன்ஸ்ற்
99. து. பிரியந்தி கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை
100. வை. மதுவந்தி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
101. தி. வசீகரன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
102. ஆர். செல்வின் புனித பத்திரிசியார் கல்லூரி
103. இ. நிரோசன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
104. ர. சரண்யா றோ. க. த. க. பாடசாலை.
105. ரா. திவாகர் வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
106. நி. பகீகரன் சங்குவேலி அ.த.க. பாடசாலை
107. த. ஜனந்தினி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
108. எஸ். ஜனகன் சென்ஜோன்ஸ் கல்லூரி
109. வ. செல்வகுமரன் கைதடி குருசாமி வித்தியாலயம்
110. ச. பிரவீணா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
111. ஆ. நிறோஜா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
112. ம. மனோர்த்திகா கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
113. செ. யசோதா முருகமூர்த்தி வித்தியாசாலை
114. கே. சாயிராம் உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
115. செ. சிவேஸ் அருணாசலம் வித்தியாலயம்
116. ச. கீர்த்தியா உடுவில் மகளிர் கல்லூரி

# குணசேனாவின் புத்தகக் கண்காட்சியும்விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

எம்.டி குணசேன நிறுவனம் மாபெரும் புத்தகக் கண்காட்சியையும் விற்பனையையும் இன்று முதல் இம் மாதம் 20 ஆம் திகதி வரை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சியும் விற்பனையும் 3,4 ,5,6 ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்திலும்-

8,9,10 ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும்-

12,13 ஆம் திகதிகளில் புலோலி மகாவித்தியாலயத்திலும்-

16,17 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும்-

19,20 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

இன்று காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இந்நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தர பரமசாரிய சுவாமிகள் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், நாகவிகாராதிபதி ஞானரத்தின தேரர் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர். (ஷ)


# பொலித்தீன் பாவிக்காதீர்

கடைக்குப் போகும் போது பழைய பேப்பர், பழைய துணிகளில் தைத்த பைகளை எடுத்துச்செல்லுங்கள். பொலித்தீன்பைகள் தந்தால் வாங்காதீர். அவை உக்காது. அதனால் மழைநீர் நிலத்தினுள் செல்லாது கடலுக்குள் சென்று விடுகிறது.

பொலித்தீனை எரித்தால் நச்சுப் புகைதான் வரும்.

(5626)

பொது நலன்விரும்பி

# நாட்டைப் பிளவுபடுத்தாது அதிகாரத்தைப் பகிர்வதே சிறந்தது

## ஜாதிகசங்க சபா தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கருத்தொற்றுமை கண்ட சரியான கண்ணோட்டங்களின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளைநடத்த வேண்டுமென்று ஜாதிக சங்க சபா எனப்படும் தேசிய பௌத்த பிக்குமார் அமைப்பின் தலைவர் சங்கைக்குரிய மாதுளவாவே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு பேச்சுக்கள் நடத்தப்பட்டால் மாத்திரமே இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் நம்பிக்கையின்அடிப்படையில் இவை மேற்கொள்ளப்படுமானால் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லைமுதலில்இருதரப்புக்கு மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியம்.

இதேவேளை, பேச்சுவார்த்தைகள் நடைபெறும் விதத்தில் தான் நாடு பிளவுபடுமா என்பது தங்கியிருக்கிறது. நாட்டை பிளவுபடுத்தாது அதிகாரத்தை பகிர்வதே முக்கியம் என்றும் அவர் மேலும் வலியுறுத்தித் தெரிவித்துள்ளார்.

(ஷ-9)

## யாழ். குடாநாட்டுக்கு 6 மாத காலத்தில் 33 அமைச்சர்கள் வருகை

(தென்மராட்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான அரசாங்கம் பதவியேற்ற கடந்த ஆறுமாதகாலத்தில் 33 அமைச்சர்களும் நூற்றுக்கணக்கான அமைச்சு அதிகாரிகளும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இதுவரை விஜயம் செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இருப்பினும் கூட, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரை எத்தகைய பாரிய அபிவிருத்தித்திட்டங்களோ அல்லது புனரமைப்பு நடவடிக்கைகளோ இடம்பெறவில்லை எனவும் பொதுமக்கள்தரப்பில் கூறப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இருபத்தைந்துக்கு மேலான பொது, வர்த்தக, சமய, சமூக நிறுவனங்களும் வருகைதந்துள்ளன.

(உ-77)

## அல்லைப்பிட்டியில் புதிய மினிமுகாம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

அல்லைப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் கடற்படையினரால்மினிமுகாம்ஒன்றுஅமைக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே அல்லைப்பிட்டிச் சந்தியில் காணப்பட்ட சோதனைச் சாவடிகள் அகற்றப்படும் அதேவேளை அல்லைப்பிட்டிச் சந்தியில்இருந்து 100மீற்றர் தொலைவில்மேற்படி புதிய மினிமுகாம் அமைக்கப்படுகிறது.

இதேவேளை, அல்லைப்பிட்டியில் சோதனைகள் எதுவும் தற்போதுஇடம்பெறாத போதும்இங்குள்ளவீதித்தடைகள் எதுவும் அகற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஷ-75)

## 6 மாத காலத்தில் 30 ஆயிரம்வீதிவிபத்துக்கள்

(கொழும்பு)

நாட்டில் கடந்த 6மாத காலத்தில்மட்டும் 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வீதிவிபத்துக்களை கட்டுப்படுத்த பொது மக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

பொலிஸாரால் மட்டும் இப்பிரச்சினையை தீர்க்க முடியாது சமூகத்தில் அனைத்து அங்கத்தவர்களும் இதற்கு உதவ வேண்டும் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

தற்போது நாட்டில் பாவனைக்குதவாத அதிக எண்ணிக்கையான வாகனங்கள் புழக்கத்தில் உள்ளதாகவும், வீதிவலயமைப்பு ஒழுங்காக பேணப்படாததும் விபத்துக்களுக்கு ஒரு முக்கிய காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## சாயிசேவா நிறுவனத்தில் மனித உன்னதம் கண்காட்சி

(தென்மராட்சி)

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயிசேவா நிறுவனத்தின் இளைஞர் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் 'மனித உன்னதம்' கண்காட்சி இம் மாதம் 12,13, 14 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியின் போது வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பிரதம விருந்தினராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதய நாதன் சிறப்பு விருந்தினராகவும் பங்கு கொள்ளவுள்ளனர்.

மனிதஉன்னதம்கண்காட்சியில், மனிதன் யார்? உடல் ஆரோக்கியம், மனம், மனத்தின்குறைபாடுகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் போன்றவை உள்ளடங்கியிருக்கும்.

(உ-77)

# சுந்தரத் தமிழின் தூய்மையை பேண வேண்டியவர்கள் தமிழர்களே

## தமிழ்த்தின விழாவில் கலாநிதி ஜெபநேசன்

(கோப்பாய்)

அமிழ்தினும் இனிய தமிழுக்கு விழாவெடுக்க வேண்டிய பொறுப்பும், தமிழர் கலைகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவற்றைப் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பும் தமிழர்களாகிய எமக்குண்டு. இன்று தமிழ் மொழியில் ஆங்கில மொழியின் ஊடுருவல் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் தமிழ் மொழியின் தனித்துவம் தூர விலகிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. எனவே சுந்தரத் தமிழை தூய்மையாக வைத்திருக்க வேண்டியவர்கள் தமிழர்களே. இதைத் தட்டிக் கழிக்க நாம் முயலக் கூடாது.

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்ச் சங்கத்தாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்ச் சங்கத் தலைவர் ஜெ. சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தமிழர்கள் வாழ்வில் தனித்துவம்மிக்கதாக திருக்குறள் அமைந்துள்ளது. இது மனிதனுக்கு ஞானம், தெளிவு, ஆசி என்பவற்றைத் தருகிறது அத்துடன், வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமைகின்றது.

இது போன்றே மனிதனை நெறிப்படுத்துவதாக கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்றவையும் அமைந்துள்ளன என்பதை பாரதியின் பாடல் சுட்டி நிற்கின்றது. இது தமிழை வளர்ப்பவன் தொண்டு செய்பவன் ஒரு போதும் இறப்பதில்லை என்பதைத் தெரியப்படுத்துகின்றது என்றார்.

தொடர்ந்து தமிழ்ச் சங்கத்தால் 'இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு' என்ற நூல் வெளியீடும் நடைபெற்றது. இலக்கியகர்த்தா கௌரவிப்பு நிகழ்வில் சைவப்புலவர் இ. செல்லத்துரை (சிறுவைக் கிழார்) கல்லூரி அதிபரினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

(ஷ-79)

## பொலிஸ் பிடியில் இருந்து தப்ப முயன்றவர் மரணம்

(கொழும்பு)

பொலிஸின் பிடியில்இருந்து தப்ப முயன்றவர், ஜீப்பில் இருந்து குதித்ததில் பரிதாபமாக மரணமானார்.

கடந்த சனியன்றுஇரவுசப்புகஸ்கந்த பகுதியில் பொது மக்களிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக தேடுதல் நடத்தச் சென்ற பொலிஸாரின் ஜீப் வண்டி மீது கல்லெறிந்த குற்றத்திற்காக கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்ற ஐவரில் ஒருவரே இவ்வாறு மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

(உ)

## தெருக்கூத்துப் போட்டி கரவை. இராஜ கிராம உயிர்ப்பூட்டல்குழுமுதலிடம்

(ஈச்சமோட்டை)

மனித முன்னேற்ற நடு நிலையத்தின் உயிர்ப்பூட்டல் குழுவினரிடையே நடத்தப்பட்ட 'வாழும் உரிமையை உறுதிப்படுத்துவோம்' எனும் தலைப்பிலான தெருக்கூத்துப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

முதலாம் இடத்தை கரவெட்டி இராஜகிராம உயிர்ப்பூட்டல் குழுவும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் திருநகர் உயிர்ப்பூட்டல்குழுவும், மூன்றாம் இடத்தை கைதடி உயிர்ப்பூட்டல் குழுவும் பெற்றுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

(உ-59)

## கலாசார சீரழிவை போக்க தீவிர கண்காணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைதூக்கியுள்ள கலாசாரச் சீரழிவுகளைப் போக்கும் வகையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார மேம்பாட்டுப் பேரவை இந் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

(உ-9)

## கரப்பந்தாட்டம் ஆவ. மத்திய விளையாட்டு கழக அணி வென்றது

(சுண்டுக்குளி)

நீர்வேலி ஐக்கிய விளையாட்டு கழகம் அதன் 48வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திவந்த கரப்பந்தாட்ட போட்டிகளின் இறுதிஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும் கழகத் தலைவர் மயில்வாகனதின் தலைமையில் கழகவிளையாட்டு அரங்கில் கடந்தசனிக்கிழமை நடை பெற்றது.

முதலில் இடம் பெற்ற 6 வீரர்கள் பங்குபற்றும் ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம், புத்தூர் கலை ஒளி விளையாட்டு கழகத்தை 3:1 என்ற செற் கணக்கில் 15:2, 15:12, 07:15, 15:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இந்தஆட்டத்துக்குநடுவராக எஸ். அப்புத்துரை கடமையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 30 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட 4 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் 'ஓவர் கேம்' முறையிலான கரப்பந்தாட்டபோட்டியில் முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக் கழகஅணி வண்ணார்பண்ணை வள்ளுவன் விளையாட்டுக் கழக அணியை 35:29 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இந்தஆட்டத்துக்குநடுவராக எஸ். முருகமூர்த்தி கடமையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற செற் அப்முறையிலான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டு கழக அணி ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை3:2 என்றசெற் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கி கொண்டது.

இந்த ஆட்டத்துக்கு நடுவர்களாக எஸ். அப்புத்துரை, கே. மனோகரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக கே. ஏகாம்பரம், கே. மனோகரன்ஆகியோரும் கௌரவ விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் கே. குணநாதனும் கலந்து கொண்டனர்.

(உ-110)

# பிரதேச செயலகங்களுக்கிடையே வெவ்வேறு பட்ட நடைமுறைகள்

## மீளக்குடியமர்வோர் மிகுந்த மனக்கவலை

(ஊர்காவற்றுறை)

மீளக் குடியமர்வோர் விடயத்தில், தீவகப் பகுதி பிரதேச செயலகங்கள் வெவ்வேறு நடைமுறைகளைக் கையாள்வதாக தெரிவிக்கப் படுகின்றது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்பவர்களுக்கு விரைவாக உலர் உணவு முத்திரை மற்றும் அனுமதிப்பத்திரம் என்பன வழங்கப்படுவதுடன்,

சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் சமையல் பாடசாலை உபகரணங்கள், உடுபுடவைகள் என்பன வழங்கப்படுகின்றன.

ஆனால் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்பவர்களுக்கு நிவாரண முத்திரை மற்றும் அனுமதிப் பத்திரம் வழங்குவதில் மிகுந்த தாமதம் நிலவுவதாகவும்,

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் எவ்வித உதவியும் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிய வந்துள்ளது. (உ-75)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 13

## பகுதி II

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
**கே.வி.குணசேகரம்**
**எம்.விக்னேஸ்வரன்**

**பாரதி தாசன் இயற்றிய பாடலொன்று கீழே தரப்பட்டுள்ளது. அதை வாசித்து 1-10 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

தலை வாரிப் பூச்சூட்டி உன்னைப் பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை
சிலை போல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து கின்றாய்.

**பொருத்தமான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

01. அன்னை போகச் சொன்னது.
    1. பிள்ளை பாட 2. கடைக்கு 3. பாடசாலைக்கு
02. தலை வாரி அன்னை.
    1. பூச்சூடினாள் 2. கட்டினாள் 3. விட்டாள்
03. சிலை போல நின்றவர்.
    1. மகள் 2. அம்மா 3. மகன்

**விடை தருக.**

04. பாடசாலைக்குப் போகச் சொன்னவர் யார்?
05. சிந்தக் கூடாதது எது?
06. இப் பாடல் என்ன கூறுகிறது?
07. இப் பாடலை இயற்றியவர் யார்?
08. அன்னைக்கு ஒத்த சொல் தருக?
09. அஃறிணைச் சொல் ஒன்றைப் பாடலிலிருந்து தெரிந்து எழுதுக.
10. சினைப் பெயரொன்றைப் பாடலிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

**பின்வரும் இணை மொழிகளை வைத்து வசனம் அமைக்குக.**

11. நகமும் சதையும் 12. அல்லும் பகலும்
13. கமலனுடன் விமலன் கை கலந்தான். இதிலுள்ள மரபுத் தொடர் எது?

**கீழே சில ஒத்த சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான மற்றொரு சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**


14. பரி, புரவி, மா, அசுவம் .......
15. கரி, ஆனை, வேழம், குஞ்சரம் ......
16. வெளிச்சம், சுடர், கதிர், சோதி ..........

**கீழ் வரும் சொற்கள் இரு வேறு நிகழ்வுகளைக் குறிக்கும் வகையாகக் கடிதம் எழுதுக.**


17. மதி
18. மதி
19. விளக்கு
20. விளக்கு

**தொகுதிச் சொற்களின் கீழ்க் கோடிடுக.**

21. பல ஆடுகள் சேர்ந்த தொகுதி
    1. மந்தை 2. நிரை 3. கூட்டம்
22. தென்னைகள் பல வளரும் இடம்.
    1. தோப்பு 2. காடு 3. தோட்டம்
23. 4.30 மணி நேரத்தைக் குறித்துக் காட்டுக.




24. **கீழேயுள்ள மணிக்கூடு 42 நிமிடங்கள் முந்திச் செல்கிறது. சரியான நேரம் என்ன.**




**தரம் I தொடக்கம் V வரையுள்ள பாடசாலையொன்றின் மாணவர் விபரம்.**

| வாரத்திலுள்ள நாள் | வந்த மாணவர்கள் | | மொத்த மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| திங்கள் | 103 | 108 | 112 | 121 |
| செவ்வாய் | 108 | 105 | 112 | 121 |
| புதன் | 101 | 116 | 112 | 121 |
| வியாழன் | 99 | 117 | 112 | 121 |
| வெள்ளி | 107 | 114 | 112 | 121 |

25. அதிக மாணவர்கள் வராது நின்ற நாள் எது?
26. கூடுதலாக மாணவர்கள் வந்த நாள் எது?
27. இப் பாடசாலையிலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை என்ன?
28. பெண்களில் அரைப்பங்கினர் இந்துக்கள். மிகுதியின் அரைப் பங்கினர் கிறிஸ்தவர்கள். ஏனையோர் இஸ்லாமியர்கள் ஆயின் கிறிஸ்தவர்களின் தொகை என்ன?
29. வியாழக்கிழமை ஒரு மாணவிக்கு 125g பணிஸ் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிஸின் எடையை கிலோகிராமில் தருக.
30. வியாழக்கிழமை மாணவர் ஒருவனுக்கு 120ml குளிர்பானம் கொடுக்கப்பட்டது. மாணவர்களுக்குக் கொடுக்க எவ்வளவு குளிர்பானம் தேவை?
31. தரம் 1 இல் 22 மாணவிகளும் தரம் 2இல் தரம் ஒன்றை விட மூன்று மாணவிகள் கூடுதலாகவும் தரம் மூன்றிலும், நான்கிலும் 19, 20 மாணவிகள் இருந்தனர். தரம் ஐந்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை என்ன?
32. தரம் இரண்டில் மாணவிகளை விட மாணவர்கள் மூன்று பேர் கூட இருந்தனர் தரம் இரண்டின் மாணவர் தொகை என்ன?
33. தரம் இரண்டு மாணவர்களிற்கு அன்று சீருடை வழங்கப்பட்டது. மொத்தமாக எத்தனை துணிப் பொதிகள் அவ் வகுப்புக்குக் கொடுப்பதற்குத் தேவை?

தாவரங்கள் இல்லாத பூமியில் எந்த உயிரினமும் வாழ முடியாது. தாவரங்களிலேதான் எல்லா உயிரினங்களும் தங்கியுள்ளது. தாவரங்கள் கரியமில வாயுவை உள்ளெடுத்து பிராண வாயுவை வெளி விடுவதால் வளி சுத்தமடைகின்றது. அதனால் தாவரங்களில்லாத பூமியில் காற்று இருக்க மாட்டாது. அப்படியிருந்தாலும் அசுத்தமான காற்றாகவே இருக்கும்.

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

34. வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்த தாவரம்.
    1. சவுக்கு 2. பாசை 3. முதிரை
35. வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட சிறு பயிர்த் தாவரம்.
    1. கராம்பு 2. மிளகு 3. கறுவா
36. இலங்கைக்கே உரித்தான பிராணி.
    1. மர அணில் 2. ஓநாய் 3. சிங்கம்

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

37. கரியமில வாயு என்பதன் இன்னொரு பெயர் காபனீரொட்சைட் ( )
38. பிராண வாயு என்று ஒட்சிசனைச் சொல்வதில்லை. ( )
39. பிளாஸ்திக் பொருட்களால் சூழல் மாசடைகின்றது. ( )
40. கதவு நிலை, யன்னல் போன்றன செய்ய முதிரை மரத்தைப் பயன்படுத்தலாம்.
41. மரங்களின் பட்டையை அகற்றினால் அவை பட்டுப் போகும். ( )

கத்தி ஒன்று செய்வதற்கான படி முறை கீழே தரப்படுகிறது. பெட்டிக்குள் பொருத்தமான இடம் பாவிக்கும் ஆயுதங்களை எழுதுக.

42. [ ] 43. [ ] 44. [ ]

இரும்பு → உலையிடல் → தட்டுதல் → கூராக்கல் → கத்தி


மரத்துண்டு → பிடி செய்தல் → பிடியை இறுக்குதல் → கத்தி

45. [ ] 46. [ ] 47. [ ]

A. பகுதியிலுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான வாக்கியங்களை B பகுதியிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கங்களை உரிய கூட்டில் எழுதுக.

| A. | B |
|---|---|
| 48. i பாக்குவெட்டி | [ ] சுருங்குதல் |
| 49. ii பாலூனிலிருந்து காற்று வெளியேறல் | [ ] ஆங்கிலம் |
| 50. iii பொது மொழி | [ ] ரூபா. 4.50 |
| 51. iv சாதாரண தபால் முத்திரை | [ ] பேப்பர் கூழ் |
| 52. v நடமாடும் ஆமை | [ ] 2ஆம் நெம்பு கோல் |

**பெயரைக் குறிப்பிடுக.**





53. ........................ 54. .......................... 55. .................


**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

56. கற்பனைச் சித்திரமென்பது.
    1. புதுமையான மிருகம் வரைதல் 2. பூ வரைதல் 3. இயற்கையை வரைதல்
57. பல்ஊடக அலங்காரம் என்பது.
    1. செதுக்குதல் 2. ஒட்டுதல் 3. பல் நிற விதைகளால் அலங்கரித்தல்
58. விளம்பர அறிவித்தல் என்பது.
    1. சுவரொட்டி 2. பத்திரிகை 3. முரசறைதல்
59. ஒன்றின் மேல் ஒன்று விழக் கூடியதாக இரு வெட்டுக் குத்துக்களை இட்டுத்தைப்பது.
    1. குறுக்குத்தையல் 2. மீன் முள்ளுத் தையல் 3. வெட்டுக்குத்துத்தையல்
60. பொம்மலாட்டப் பாடல்
    1. அம்மா நான் விளையாடப்போறேன் 2. கோணக் கோண மலையேறி
    3. முத்துப் போல மல்லிகை

**கீழே உள்ள படத்தை அவதானித்து வினாவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




61. வளிக்குமிழ் எதை நோக்கி அசைகிறது.........
62. ஏன்?
63. குளிர் நீரில் இவ்வுபகரணத்தை வைத்தால் வளிக்குமிழ் எப்பக்கமாக அமையும்.
64. ஏன்?



மேலேயுள்ள படத்தின் இருபயன்பாடுகள் தருக.

65. ............................
66. ......................................
67. எத்தனை யோக்கட் கோப்பைக்கு நிறம் தீட்டப்படல் வேண்டும்.

**தொடர்பு படுத்துக.**

| A | B |
|---|---|
| 68. வெண்டிக்காய் விரயமாதலைத் தவிர்க்க | மூன்று பிரிவு |
| 69. பாராளுமன்றத் தேர்தல் | கவனமாய் நிற்றல் |
| 70. பண்டைய இலங்கை | 9 வருடங்கள் |
| 71. கட்டாயக் கல்வி | 6 வருடங்கள் |
| 72. நெத்தலி சாப்பிட்டால் கொப்பளம் வரும் | ஏழு லீற்றர் |
| 73. தேசியக் கொடி ஏற்றும் போது | அதிகம் முற்ற முன் பிடுங்குதல் |
| 74. வலைப் பந்துத் திடலில் மத்திய கோடு | மூட நம்பிக்கை |

''ஒரு முதியவரை வழியில் சந்தித்து'' என்ற தலைப்பில் 6 வசனங்கள் எழுதுக.
75 - 80.

## கல்விப் பகுதி

**வினாத்தாள் 13**
**''வலம்புரி'',**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

மாணவர் முழுப்பெயர் :- ..........................................................

சொந்த முகவரி :- ..........................................................

கற்கும் பாடசாலை :- ..........................................................

**இப் படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாள்களுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.**

# இன்று ஒரு தகவல்

## மனஇறுக்கம் ஆபத்தானது

ஒருவர் 'கோயிலுக்குப் போய் முடி இறக்கிவிட்டு வரலாமென்று இருக்கிறேன்' என்று ஒரு வருஷமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால்-ஒருநாளாவது அவர் போய்விட்டு வந்தபாடில்லை. 'ஏன் சார் இப்படி அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வருகிறீர்கள். ஒரு நாளைக்கு போய் மொட்டையடித்து விட்டு வந்துவிட வேண்டியது தானே' என்றேன். 'நான் என்ன சார் செய்வேன். ஏகப்பட்ட வேலை. எப்போது பார்த்தாலும் டென்ஷன். கோவிலுக்குப் போக நேரமே கிடைக்க மாட்டேனென்கிறது' என்று சொன்னார். ஒரு வருஷம் சழித்து ஒரு நாள் அவரைப் பார்த்தேன். தலை சுத்தமாக இருந்தது. 'என்ன சார்? கோயிலுக்குப் போய்விட்டு வந்துவிட்டீர்கள் போல இருக்கிறது' என்றேன்.

அவர் கோபமாக 'நான் எங்கே சார் போனேன். அங்கே போக வேண்டிய அவசியமே இல்லாத அளவுக்கு முடியெல்லாம் தானாகவே கொட்டிப்போய் விட்டது சார்' என்றார். 'எதனால் அப்படியானது?' என்று விசாரித்தேன். 'டென்ஷன்' தான் இதற்குக் காரணம் என்று டாக்டர் சொல்கிறார் என்றார் அவர். இது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால்... கொத்துக் கொத்தாக முடி உதிர்வதற்கும், வழுக்கை விழுவதற்கும்-டென்ஷனும் ஒரு காரணம் என்பதுதான் உண்மை. டென்ஷனால் என்னென்ன கோளாறுகள் வரும் தெரியுமா? டாக்டர்களைக் கேட்டால் அவர்கள் ஒரு பட்டியலையே வரிசையாகச் சொல்கிறார்கள்!

தலைவலி, இடுப்புவலி, முதுகுவலி, அஜீரணம், மலச்சிகல், மூலம, சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், இதயக்கோளாறு, ஹைபர் டென்ஷன், ஹிஸ்டிரியா, வேறு சில மன நோய்கள், பெண்களுக்கான மாதாந்தக் கோளாறுகள், ஹார்மோனல் உடன் விளைவுகள், கொத்துக் கொத்தாக முடி உதிதல், வழுக்கை-இப்படி இவற்றில் எது வேண்டுமானாலும் டென்ஷனால் வரலாமாம்.

ஒருவர் கடுமையான டென்ஷனில் இருக்கிறார். அந்தச் சமயத்தில அவரின் வயிற்றினுள்ளே ஆராய்ச்சி செய்து பார்த்தார்களாம். எப்படி என்கிறீர்களா? காஸ்றோஸ்கோப் என்ற ஒரு கருவி மூலமாகத் தான. அப்படி ஆராய்ந்து பார்க்கிறபோது, இளஞ்சிவப்பாகஇருக்க வேண்டிய அந்தஉள்பகுதி தக்காளிப் பழம் போன்று செக்கச்செவேல் என்று இருந்ததாம். டென்ஷனாக இருக்கும் போது வயிற்றில் அமிலம் அதிகமாகச் சுரக்கிறதாம். அதனால் இப்படிச் சிவந்து விடுகிறதாம். அடிக்கடி இப்படி ஆகிக் கொண்டிருந்தால்-மனிதனுக்கு ஹைபரசிடிற்றி என்னும் நிலை உண்டாகிவிடும். அது முற்றிய நிலையில் அல்சராகக் கூட மாறிவிடுமாம்.

டென்ஷன் என்பது இயற்கை நமக்குக் கொடுத்திருக்கிற ஒரு எச்சரிக்கை உணர்வு-உடல் ரீதியான ஒரு தற்காப்பு உணர்வு. ஒரு ஆபத்து வருகிறபோது அதை எதிர்த்துப் போராடுவதற்கு அல்லது தப்பி ஓடுவதற்கு தயாராகிவிடுகிறோமல்லவா? அது தேவை தானே. ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் எதற்கெடுத்தாலும் டென்ஷனுக்கு ஆளாகிவிடுகிறோம். நமக்கென்று ஒரு கௌரவத்தை எதிர்பார்க்கிறோம். அந்தக் கௌரவத்துக்கு ஒரு குறைவு வரும் போல இருந்தால் உடனே 'டென்ஷன்', வரவேண்டிய பஸ் நேரத்திற்கு வந்து சேரவில்லையென்றால் 'டென்ஷன்'.

அனாவசியமாக உடம்பையும், மனதையும் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள் சார். எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளுங்கள். எப்போதும் உடன்பாடாக எண்ணக்கற்றுக் கொள்ளுங்கள். எதிர்மறையாக யோசித்துக் கொண்டிருக்காதீர்கள். வீட்டில் ஒரு பொருள் தீர்ந்து போனதென்றால் அதுஇல்லை என்று நினைக்காதீர்கள். நாளைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று நினையுங்கள். எதற்கெடுத்தாலும் எனக்கு நேரம்இல்லை, நேரம் இல்லை என்று சொல்கிற பழக்கத்தை விட்டு விடுங்கள். எதையும் முறையாகத் திட்டம் போட்டுச்செய்து கொண்டு வந்தால் எல்லாவற்றிற்கும் நேரம் இருக்கும். எனக்குஇன்றைக்கு நேரம் கிடைக்கவில்லை. அதனால் பல் விளக்கவில்லையென்று யாராவது சொல்கிறீர்களா? பொறுப்பாக உங்கள் கடமையைச் செய்யுங்கள். அதே நேரத்தில் ஆனந்தமாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். மனஇறுக்கம் இல்லாமல் வாழ்கிறவாழ்க்கை தான் மகத்தான வாழ்க்கை.

அதிகமாக ஆசைப்படுவதும் டென்ஷனுக்கு ஒரு காரணம். ஒருவர் இருககிறார், அவர் எப்போதும் ஒருசின்ன 'டென்ஷனுக்குக் கூட இடங் கொடுக்கமாட்டார். அதிகமாக ஆசைப்படமாட்டார். ஒரு நாள ஆண்டவனே அவரைத்தேடிக் கொண்டு வந்து ''நீ எவ்வளவு காலம் உயிரோடு இருக்கவேண்டும்என்று ஆசைப்படுகிறாய்?'' என்று கேட்டிருக்கிறார். அதற்கு இவர் 'நான் அதிகமாக ஒன்றும் ஆசைப்படவில்லை. நான் சாகிற வரைக்கும் உயிரோடு இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அது போதும்; என்றாராம் டென்ஷனே இல்லாத ஆசாமி.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமகாலத்துக்கு ஏற்ற வகையில்

# உயர் கல்வி நவீனமயப்படுத்தப்படும்

## மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் தகவல்

(கொழும்பு)

சமகாலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்வகையில்உயர் கல்வி நவீன மயப்படுத்தப்படுமென மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்தஞாயிறு இடம்பெற்ற மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில்'

ஒவ்வொரு நாடும் அதன் தேவைகளை கருத்திற் கொண்டு மிகப் பொருத்தமான கல்வி முறையை அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்ட இலங்கை போன்ற நாடுகள் அவற்றின் மூலவளங்களை சர்வதேச நாடுகளில் இருந்து பெறவேண்டியுள்ளது.

பல்கலைக்கழக பாடவிதானங்களில்விவசாயபொறியியல் போன்றபுதிய பாடங்களும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

இதேவேளை நாட்டின் தேவை கருதி தொழில் நுட்ப மற்றும் மொழிகள் அடிப்படையிலான அறிவைவிருத்தி செய்வது அவசியம்.

பிரதமரின் வழிகாட்டலின் அடிப்படையில் விரைவில் இவ்வசதிகள் மேற் கொள்ளப்படவுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ-9)

## வண்டுகள், புழுக்கள் உள்ள நிலையில்

# பாவனைக்கு வழங்கப்பட்ட சோயாமா கால்நடைகளுக்குத் தீவனமானது

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தாய்சேய் சிகிச்சை நிலையங்களுக்கென சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2ஆயிரத்து560 கிலோ கிராம் சோயா மா பாவனைக்கு உதவாத நிலையில் கால்நடைகளுக்குத்தீவனமாக வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச, உதவி வழங்கும் நாடொன்றினால் சுகாதாரத் திணைக்களம் ஊடாக வழங்கப்பட்ட மேற்படி சோயா மாவிற்குள் புழுக்கள், வண்டுகள் பெருமளவில் காணப்பட்டதைத் தொடர்ந்தே உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியினால் பாவனைக்கு இடைநிறுத்தப்பட்டது.

இதேவேளை இவ்வாறான தரம் குறைந்ததும் பாவனைக்குதவாததுமான சோயாமா மேலும் கையிருப்பில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-23)

## உண்மை நிலையை அறிய

# வாழைச் சேனைப் பகுதிக்கு இரகசியப் பொலிஸார் விரைவு

(கொழும்பு)

வாழைச் சேனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்த உண்மை நிலையினை அறிவதற்காக இரகசியப் பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் அவசர பணிப்பின் பேரில் மேற்படி இரகசியப் பொலிஸார் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இரகசியப் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் கேட்டுள்ளது. (உ)

## புதிய அதிபர் நியமனம்

(கோப்பாய்)

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் புதிய அதிபராக கா. தர்மரட்ணம் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். அநுராதபுரம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றிய இவர் நியமனத்தின் முன் சிறுப்பிட்டி அ. த. க பாடசாலை அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஷ-79)

## அம்பாறை மாவட்ட

# கண்காணிப்புக் குழு தலைவர் அறிவுறுத்தல்

(அம்பாறை)

எந்தச் சம்பவம் பற்றிய முறைப்பாடானாலும் முழுமையான விபரங்கள் எழுத்து மூலம் தரப்பட வேண்டுமென அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஸ்வைன் மைக்கல் பெஸற் கேட்டுள்ளார்.

வாய்மூல முறைப்பாடுகளோ வதந்திகள்அடிப்படையிலான முறைப்பாடுகளோ நடவடிக்கைக்காக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## 4500 குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் இனமோதலை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பகுதியில் தமிழ்-முஸ்லிம் எல்லைப் பிரதேசக் கிராமங்களில் உள்ள சுமார் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் இடம் பெயர்ந்து உறவினர்களினதும், நண்பர்களினதும் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். (வ)

## ஆஸி. பல்கலைக்கழக கிளை இலங்கையிலும்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின்மொனஷ் சர்வதேச பல்கலைக்கழகம் அதன்கிளை ஒன்றைஇலங்கையில் நிறுவவுள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், இப் பல்கலைக்கழகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மஹாபொல நிதியத்தின் பணிப்பாளர்நாயகம் சாமளா பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இயங்கவுள்ள இப் பல்கலைக்கழகத்தில் இந்தியா, பங்களாதேஷ் உட்பட பலதெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும்சேர்த்துக்கொள்ளப்படவுளளனர்.

இவர்களிடமிருந்து பெறப்படும் கட்டணத்திலிருந்து வறியமாணவர்களுக்குஇலவச கல்வி வழங்கதீர்மானித்துள்ளதாகவும் பெரேரா தெரிவித்துள்ளார். (உ-3)

# புலிகள் மீதான தடை இம்மாத இறுதியில் நீக்கம்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தாய்லாந்துப் பேச்சுக்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில்இடம் பெறவுள்ளதாகவும், இது குறித்த் சரியான திகதி இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படவிருப்பதாகவும் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்கு ஏதுவாக இம்மாத இறுதியில்புலிகள் மீதான தடை நீக்க அறிவிப்பு வெளிவரவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இது இவ்வாறிருக்க பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகளைக் கவனிக்க சமாதானச் செயலக அதிகாரி பள்ளியக்காரவிரைவில் தாய்லாந்து செல்லவுள்ளார். (உ)

# தேயிலைத் தோட்டங்கள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

தனியார் தேயிலைத் தோட்டங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதிகரித்த பொருளாதாரச் சுமை, பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்துகளை காய வைப்பதற்கான அடுப்புக்குப் பயன்படும் விறகுப் பற்றாக்குறை, நிவாரணம் வழங்கப்படாமை ஆகிய காரணங்களால் தொடர்ந்தும் தேயிலைத் தோட்டங்களை பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும்,

இந்த வகையில் 225தேயிலைத் தோட்டங்கள் விரைவில் மூடப்படவுள்ளதாகவும் தேயிலைத் தோட்ட உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (உ)

# இந்திய மீனவரின் அத்துமீறலை தடுத்துநிறுத்தி

# எமது பொருளாதாரத்தை உறுதி செய்க!

## கடற்றொழிலாளர் ஜனாதிபதிக்கு கடிதம்

(திருநெல்வேலி)

எமது மீனவர்கள் படும் அவல நிலையில் இருந்து அவர்களை மீட்கவும், இந்திய மீனவர்கள் எமது கடலினுள் அத்துமீறி நுழைந்து இழுவைப்படகுத் தொழில் செய்வதை நிறுத்தவும் உடன் நடவடிக்கை எடுத்து எம்மவர்களைக் காப்பாற்றுங்கள்?

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும்,

யாழ்.குடாநாட்டில் வாழுகின்ற கடற்றொழிலாளர்கள் கடந்த பத்து வருடங்களாக ஆழ்கடல் தொழில் செய்ய முடியாத நிலையில் சிறு தொழில் வகைகளையே செய்து வந்தனர் இதனால் பலவகையான கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டும் சாத்வீகமான போராட்டங்களை நடத்தியும் வந்தனர். இதன்பயனாக 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆழ்கடலில் தொழில் செய்யும் அனுமதி கிடைக்கப் பெற்றது. இத்தொழிலை செய்வதற்குரிய உபகரணங்கள் இல்லாதவகையில் எமது தொழிலாளர்கள் தத்தம் சொத்துக்களை அடைமானம் வைத்தும், விற்றும் சேகரித்த பணத்தைக் கொண்டு தொழிலை ஆரம்பித்து செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தியாவுக்கு சொந்தமான இழுவைப் படகுகள் எமது கடற்பிராந்தியத்துக்குள் தொழில் செய்வதனால் எமது தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு சேர்த்த தொழில் உபகரணங்களை இழந்த நிலையில் கரை திரும்பி அடுத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில் ஏங்கித்தவிக்கின்றனர்.

18. 06. 02 அன்று இன்பருட்டி கிராமத்தில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான வலை, கடலில் களவாடப்பட்டது. இதேபோன்று 19.06.02 இல் பொலிகண்டி கிராமத்தில் 30 அறக் கொட்டி வலைகள் சேதமடைந்துள்ளன 20.06.02 இல் வல்வெட்டித்துறையில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வளிச்சல்வலைகள் சேதமடைந்துள்ளன. 22.02.02 இல் கற்கோவளம் கிராமத்தில் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வலை கடலில் களவாடப்பட்டது. இந்நிலையில் எமது தொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த பத்து வருடங்களின் பின் எமது தொழிலாளர்கள் தொழில் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டதை எண்ணி சந்தோசமாகவும், இது வரை இழந்தவற்றையெல்லாம் இத்தொழில்தடை நீங்கப்பட்டதன் மூலம் மீட்டுவிடுவோம் என எண்ணி கடன்பட்டு சம்பாதித்த சொத்துக்களையும் இழந்து வேதனை அடைகின்றனர்.

இழுவைப் படகு மூலம் தொழில் செய்வதனால் மீனினம் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல மீன்கள் நீண்டகாலம் உயிர்வாழக் கூடிய கடற்தாவரங்கள் அழிக்கப்பட்டு மீன்கள் வாழக் கூடிய சூழல் இல்லாது போகின்றது.

அத்துடன் இழுவைப்படகுத் தொழிலினால் மீன்கள் கலைந்து இடத்துக்கிடம் மாறிப்போய்விடுகின்றன. இந்நிலையால் எமது தொழிலாளர்கள் நிரந்தர தொழில் செய்யமுடியாத நிலையும் கடலில் மீன்களைத் தேடியலையும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் சிலமீனினம் இல்லாது ஒழிக்கப்பட்டும்வருகின்றது. அந்நியர்ஃள் எம் வளங்களையெல்லாம் சூறையாடிக் கொண்டுபோக நம்மவர்கள் எப்படி வாழ்வது என்பது புரியவில்லை.

எனவே, ஆழ்கடலில் தொழில் செய்வதற்கு நவீன சாதனங்களை கடன் அடிப்படையில் வழங்க துரித நடவடிக்கை எடுத்து, எமது தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழில் செய்யக்கூடிய சூழ்நிலையை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-43)

## மலத்தியோன் விசிறல்

(மந்திகை)

துன்னாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் நுளம்பு களின்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மலத்தியோன் விசிறல் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர் இளங்கோ தெரிவித்தார். (உ-23)

## ஒத்திவைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நாளை நடத்தப் படவிருந்த பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது. (உ-23)

## ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தின வாய் மொழி மூலப் போட்டிகள் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெறுமென நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் அறிவித்துள்ளார். (உ-19)

## தென்னாசிய

பூர்வமான நகர்வுகளை கையாளுதல் சிறந்தது.

தென்னாசியாவில் அமெரிக்கத் தலையீடு

உலக வல்லரசு என்ற தனி அதிகாரம் கொண்ட அமெரிக்காவின் நலன்களுக்கு விதிவிலக்கில்லாத தென்னாசிய வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பொருளாதார சுரண்டலுக்கும் இராணுவஇணவாக்கத்துக்கும் ஏற்றதயார்ப்படுத்தப் படும் பிராந்தியமாக வளர்ந்து வருகிறது இந்தியாவில்பாகிஸ்தானில், இலங்கையில் நேபாளத்தில் அமெரிக்க ஊடுருவல் மிக தீவிரமாக பரவி வருகின்றது. வல்லரசுப் போட்டியற்ற உலகத்தில் சில தடைகள மட்டுமே அமெரிக்காவின் ஆதிக்க பரவலுக்கு தடையாக அமைகின்றன. குறிப்பாக ரஷ்யாவினதும் கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா கூட்டும் சீனாவினதும் தென்கிழக்காசியாவினதும் ஒத்துழைப்புமே அமெரிக்காவின் தடையாகும். சுணிசமான தடைகள் வில்லியம் புஷ் ஆட்சிக்கு வந்த பின்புதகர்ந்து போனது. அத

# நாட்டில் இடம்பெறும் வன்செயல்களுக்கும் ஜே. வி. பிக்கும் நெருங்கிய தொடர்புண்டு

## இரகசியப் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களில் மக்கள் விடுதலை முன்னணி நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாக இரகசிய பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஆகியோர் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டது.

கடந்தசில மாதங்களாக நாட்டின் பல பாகங்களிலும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்களில் ஜே. வி. பி. உறுப்பினர்களுக்கு நேரடி தொடர்புகள் இருக்கின்றதாகவும்,

பணத்திற்காகவே ஜே. வி. பி. இவ்வாறான குற்றச் செயல்களை மேற்கொள்கிறது என்பதற்கான தகுந்த சாட்சியங்களை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் அம் மாநாட்டில் முன்வைத்தார்.

தற்போது லண்டனில் இருக்கும் கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் பணிப்புரைகளுக்கமையவே இவ்வாறான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## நம்பிக்கையில்லா

## பிரேரணைக்கு ஆதரவு

## வழங்க ஜே. வி. பி. தயார்

## தேசிய உயிர்ப்பூட்டல் இணைப்பாளர் குழு யாழில்

(ஈச்சமோட்டை)

இலங்கை கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய உயிர்ப்பூட்டல் இணைப்பாளர் குழு

குழுவினரை சந்தித்து அவர்களது பணிகளை ஊக்கப் படுத்தவுள்ளது.

கும்.சணிசமான தடைகள் வில்லியம் புஷ் ஆட்சிக்கு வந்த பின்புதகர்ந்து போனது. அதனால் அத்தகைய ஆபத்தை தகர்ப்பதற்கு இராணுவநோக்கில்தென்னாசியா மிகஅவசியமான பிராந்தியம் அதனால் இப் பிராந்தியம் அமைதியாக இருப்பது அமெரிக்கர்களுக்கு இலாபகரமானது காஷ்மீரில் போர்தவிர்க்கப்படுவதற்காக வில்லியம் புஷ் தென்னாசியாவுக்கு வருகை தருகிறார்களாயின் அமைதியின் அவசியம் பூடகமாக உணர்த்தப்படுகிறது.

உலக நாடுகளும் தலைமைகளும ராஜதந்திரப் போர் முறையைத்தான் பின்பற்றுகின்றன. அத்தகைய நோககில் விரிக்கப்பட்ட ராஜதந்திர வலையே புரிந்துணர்வு உடன்படிக்கையும் சமாதானமும் அதனால் ரணிலுக்கு நேரர் வேயோ, அமெரிக்காவோ நன்மை செய்வதற்காக செய்யப்பட்ட உடன்படிக்கை என்பதல்ல மாறாக அமெரிக்க நலன்களுக்காக செய்யப்பட்டது.அதனை பயன்படுத்துகின்ற ரணில் விக்கிரமசிங்காவையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தே எதிர்கால மாறுதல்களும் வெற்றிகளும் அமையும்.எனவே சிறந்தராஜதந்திரத்தை பயன்படுத்தினால் நிச்சயமாக மாற்றங்களின் சாதகம் தமிழ்மக்களுக்கும் கிடைக்கும்.அல்லது வரலாற்று சம்பவங்களில் ஒன்றாக காஷ்மீரியரினதும் தமிழ் மக்களதும் சமகால சூழல் அமையும். (முற்றும்)

## வழங்க ஜே. வி. பி. தயார்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசின் இரண்டு அமைச்சர்களுக்கெதிராக பொ. ஐ. முனனணி சமர்ப்பிக்க விருக்கும்நம்பிக்கை யில்லாப்பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதாகமக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினங்களை கருத்தில் கொண்டு அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராகவும், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை முன்வைக்க பொ. ஐ. முன்னணி தயாராகியுள்ளது.

இதைஅடுத்த சில தினங்களில் பிரேரணையை சபாநாயகர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும்தெரியவருகிறது. (உ-9)

### இலங்கை மருத்துவர்களின் முயற்சியில்

## முதலாவது பரிசோதனை குழாய் குழந்தை

(கொழும்பு)

இலங்கை மருத்துவர் குழுவின் முயற்சியில் முதலாவது பரிசோதலனக் குழாய்க் குழந்தை நேற்று முன்தினம் கொழும்பில் உளள தனியார் மருத்துவ மனையொன்றில் பிறந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 5 30 மணிக்கு பிறந்த இப் பெண் குழந்தை ஆரோக்கியத்துடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கு முன் பிறந்துள்ள சோதனைக் குழாய்க் குழந்தைகள் வெளிநாட்டு மருத்துவர்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டதாகவும் ஆனால் இக் குழந்தை இலங்கை மருத்துவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

இம் முயற்சியில் வைத்திய நிபுணர்கள பேராசிரியர் எச். ஆர் செனிவிரத்தின, ஏ. களுவாராட்சி சம்பாநெல்சன் ஆகியோர் உட்பட பலர் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு சோதனைக் குழாய் குழந்தையை உருவாக்குவதற்கு மூன்று லட்சம் ரூபா செலவாகும் என்றும் இதன் மூலம் குழந்தையில்லாப் பெற்றோருக்கு குழந்தைப் பாக்கியம் பெறவாய்ப்பாக இருக்கும் என்றும் பேராசிரியர் எச். ஆர். செனிவிரத்தின தெரிவித்துள்ளார். (ந-5)

(ஈச்சமோட்டை)

இலங்கை கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய உயிர்ப்பூட்டல் இணைப்பாளர் குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக்குழு பருத்தித்துறை, கரவெட்டி, மணற்காடு, சாவகச்சேரி, கைதடி, நெடுந்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள உயிர்ப்பூட்டல் குழுவினரை சந்தித்து அவர்களது பணிகளை ஊக்கப்படுத்தவுள்ளது.

இதுதவிர பெற்றோர்மற்றும் துணையை இழந்தவர்களை சந்தித்துக் கலந்துரையாடி, அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளும் இவர்களால் எடுக்கப்படவுள்ளது. (உ-59)

## தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வேண்டாம்

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலை இனம்கண்டு உரிய சிகிச்சையளிக்கும் திறமை தனியார் மருத்துவ மனைகளுக்கு இல்லை என்று .சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களிடம் தெரிவித்துள்ளது.

டெங்குக்காய்ச்சலுக்கான அறிகுறியைக் கொண்டோர் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவேண்டாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சிறைக்கைதிகளின் நிலை தொடர்பாக வலியுறுத்து

கொழும்பு)

சிறைக்கைதிகளின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்கள் தொடர்பான வழக்குகளை துரிதமாகவிசாரிக்கும் வகையில் மேலும் விரிவான நீதிமன்ற நடைமுறைகளை கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியத்தை கைதிகள் நலன் புரிச்சங்கத்தலைவர்சான்விஜயசிங்க வலியுறுத்தியுள்ளார்.

தற்போதுநாடுபூராகவும் 18 ஆயிரம் கைதிகள்சிறை வைக்கப்பட்டுள்ளனர். வழக்குகள் தாமதமானதால் சிறையிலிருந்து விடுவிக்கப்படாதவர்களே இவர்களில் அதிகமானவர்கள்.

11 வருடங்களாக தடுப்புக் காவலில்வைக்கப்பட்ட பெண் ஒருவரின் நிலைமையை உதாரணமாக காட்டிய அவர் சிறைச்சாலைகளில் உரிமைகளை மதித்து நடப்பது தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கவேண்டுமெனவும் அவர் மேலும்வலியுறுத்தியுள்ளார். (ஷ-9)

# மக்கள் வங்கியின் மகத்தான பணிகள்

வலம்புரியின் வணிக உலா

சமாதானத்தைத் திறந்த வேகத்தில் வாணிபக் குழுக்களும் வர்த்தக நிறுவனங்களும் வடக்கை நோக்கிப் படை எடுத்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் யாழ் குடா நாடு வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த மையமாக மாறியுள்ளது. இந்நிலையில் இங்கே வணிக நிறுவனங்களுக்கும், மக்களுக்கும்மகத்தான சேவையாற்றிக் கொண்டிருக்கும் வணிக வங்கிகள் பலவும் ஒன்றிற்கொன்று சளைத்தவர்களல்ல என்ற ரீதியில் தமது அபிவிருத்திப் பணிகளைத் துரிதகதியில் நிறைவேற்றி வருகின்றமை தெரிந்ததே. அந்த வகையில் அவை தம் வாடிக்கையாளர்களுக்காக அண்மைக் காலத்தில் ஏற்படுத்தித் தந்த,தர இருக்கின்ற புதிய சேவைகளை 'வலம்புரி' தன் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் அக்கறையாக இருக்கிறது. இதற்காக, மக்கள் வங்கி முகாமை யாளர்களுடனான சந்திப்பின் போது பெறப்பட்ட தகவல்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.



யாழ் பிராந்திய முகாமையாளர் எம்.கே. சிவபாதவிருதயர் மக்கள் வங்கியின் செயற்பாடு பற்றிக் குறிப்பிடுகையில் 'வட பகுதியில் நிலவிய இக்கட்டான போர்ச் சூழ்நிலையிலும் கூட எமது வங்கி தனது கிளை அலுவலகங்களைக் காலத்திற்கேற்றாற்போல் மாற்றி அமைத்துச் சேவை செய்தமை மக்களின் மதிப்பைப் பெற முக்கிய காரணியாக அமைந்துள்ளது.இன்று வடக்கில் 13 கிளைகளையும், மூன்று நீடித்த கரும பீடங்களையும் கொண்டு இயங்கும் மக்கள் வங்கி வாடிக்கையாளர்களின் வசதி கருதி காலத்துக்குக் காலம் பல புதிய சேவைகளை அறிமுகப்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே.இதன் பின்னணியில் தான் இவ்வங்கி யாழ் மக்களின் மத்தியில் நம்பிக்கையின் பாத்திரமாகவும், வாடிக்கையாளர்களின் தோழனாகவும் மாறியுள்ளது.


தற்போது எமது வங்கியினூடாகப் பல தரப்பட்ட சேமிப்புக் கணக்குகளும், நகை அடகு பிடிக்கும் சேவை என்பன நடைமுறைப்படுத்தப்படுகிறது. உதாரணமாக 'ஜயஸ்ரீ' சேமிப்புக்கணக்கு, சிறார்களுக்கான 'இசுரு உதான' சேமிப்புக் கணக்கு, ஜனஜய சேமிப்புக் கண க்கு, மகளிர் அதிர்ஷ்ட (வனிதாவாசனா) கணக்கு,




முதலீட்டு சேமிப்புக்கணக்குபோன்றவற்றைக் கூறலாம். அத்துடன் மக்கள் வங்கியின் அனைத்துப்பெயர் குறிக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகளுக்கும் இப்போது மாதாந்த வட்டி வழங் கப்பட்டு வருகிறது. அதே சமயம் சில கணக்குகளை வைத்திருப்போர் பரிசுக் குலுக்கலுக்கு உட்படுத்தி பெறுமதி மிக்க பரிசுகளை வெல்லவும் வாய்ப்புண்டு. இவை எமது வழமையான சேவை கள் ஆகும்.

மேலதிகமாக எமது வாடிக்கையாளர்களுக்குக் கடன்களை வழங்கி அவர்களைத் தொழில் முயற்சிகளில் ஊக்குவிப்பதில் எமது வங்கி சேவையாற்றி வருகின்றது. யாழ் மக்கள் வங்கி தற்போது பரந்தளவிலான சேவைகளை முன்னெடுத்து வருகின்றது. சுய தொழிலுக்கான கடன் வசதிகள், விவசாயக் கடன் வசதிகள், வீடமைப்புத் திட்டங்களை ஊக்குவிக்க எமது விவசாய சேமிப்புத் திட்டங்களை ஊக்குவிக்க எமது வங்கி பேருதவி புரிந்து வருகின்றது.

அத்துடன் எதிர் காலத்தில் கிராம மட்டங்களில் பல்வேறுபட்ட சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கான திட்டங்களும் எம்மிடமுள்ளன. நிரந்தரயுத்த நிறுத்தமும், சமாதானமும் யாழ் நகரை மீண்டும் புதுப் பொலிவு கொள்ள வைத்துள்ள இவ்வேளையில் மக்கள் வங்கி தனக்கே உரிய வழமையான பாணியில் மக்களுக்குரிய தோழனாக உழைக்கும் என்பதில் ஐயமில்லை எனத் தெரிவித்தார். மக்கள் வங்கியின் மேலதிக அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்துத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் தகவல் தருகையில் சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் வடபகுதி மக்கள் வங்கி



தனது அனைத்துச் சேவைகளையும் கடந்த காலங்களில் வழங்க முடியாது போனாலும் கூட தற் போது ஏனைய இடங் களைப் போல் சகல வங்கிக் கருமங்களையும் செயற்படுத்த நடவடிக்கை

## வடபுலத்தில் மக்கள் வங்கியின் வரலாறு

வடமாகாணத்தில் முதன் முதல் 1963 ஆம் ஆண்டு முற்பகுதியில் முல்லைத்தீவு மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டு அதே ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்திலும் காங்கேசன் துறையிலும் இரு கிளைகள் நிறுவப்பட்டன. அதன் பின்னர் வவுனியா, மன்னார், கிளிநொச்சிக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1971ஆம் வருடம் யாழ்கூட்டுறவு மாகாண வங்கியும் அதன் கிளைகளும் மக்கள் வங்கியால் கையேற்கப்பட்டதன் விளைவாக யாழ் பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, புத்தூர் (தற்போது அச்சுவேலி) சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, பரந்தன் கிளைகள் உருவாகின. அதன் பின்னர் வல்வெட்டித்துறை யாழ் நவீன சந்தைக் கிளை (தற்போது யாழ் பல்கலைக்கழகக் கிளை) மாங்குளம், முருங்கன், நல்லூர் (தற்போது ஸ்ரான்லி வீதியுடன்இணைக்கப்பட்டுள்ளது) புங்குடுதீவு (யாழ் பிரதான வீதியுடன் இணைந்தது) யாழ் கன்னாதிட்டி, பருத்தித்துறைக் கிளைகள் திறக்கப்பட்டன. அதன் பின்னர் புதிதாகக் கிளைகள் எதுவும் திறக்கப்படவில்லை. மொத்தமாக 23 கிளைகளைக் கொண்டிருந்த யாழ் பிராந்திய அலுவலகம் தற்போது 13 கிளைகளையும் மூன்று நீடித்த கரும பீடங்களையுமே கொண்டுள்ளது.

## அண்மைக்கால அபிவிருத்தி குறித்து ஓர் அலசல்

எடுக்க ப்பட்டுள்ளது. யாழ் பிரதான வீதி, கன்னாதிட்டி, பல்கலைக்கழக கிளை, பருத்தித்துறைக் கிளைகளில் அடகு வைத்தல் சேவை ஆரம்பமாகி விட்டது. அச்சுவேலி, நெல்லியடி, சுன்னாகம், வல்வெட்டித்துறை, சங்கானைக்கிளைகளிலும் , திருநெல்வேலி, மானிப்பாய் நீடித்த கரும பீடங்களிலும் ஏனைய கிளைகளில் இச் சேவை ஆரம்பிப்பது பற்றி காலக்கிரமத்தில் தீர்மானிக்கப்படும்.

### கணனி மயமாக்கப்பட்ட கிளைகள்

யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை கணனி மயப்படுத்தப்பட்டு விட்டது. அத்துடன் யாழ் பிரதான வீதி, கன்னாதிட்டி, பல்கலைக்கழக, சுன்னாகக் கிளைகள் கணனி மயப்படுத்தப்படும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. வெகு விரைவில் இக்கிளைகளும் கணனி மயப்படுத்தப்பட்டுத் துரிதகதியில் மக்களுக்கான சேவை வழங்கப்படும்.

### ATM இயந்திர வசதி

அத்துடன் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் அண்மையில் நிறுவப்பட்ட தன்னியக்கப் பணம் கொடுக்கும் இயந்திரம் மக்களுடனான கொடுக்கல் வாங்கல் சேவையை இலகுபடுத்தியுள்ளது. இதன் மூலம் இலங்கையில் உள்ள 84 கிளைகளில் இருந்து 89 தன்னியக்கப் பணம் கொடுக்கும்

ரீ.ரீ.மயூரன்

இயந்திரங்கள் மூலம் பணம் பெறும் வாய்ப்பினை யாழ் மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் பெற்றுள்ளனர். ஏனைய முக்கிய கிளைகளிலும் இவ்வசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வெளிநாட்டு சேவை

அத்துடன் வெளி நாட்டில் இருப்பவர்களிடமிருந்து 3 நிமிடங்களில் வெஸ்ரேன் யூனியன்பணக் கொடுப்பனவு முறை மூலம் பணத்தைப் பெற்றுக் கொடுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1984 இற்கு முன் அடகு வைத்து மீளப் பெறாத நகைகளையும் யாழ்ப்பாணத்தில் பகிரங்க ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வங்கி அலுவல்கள் சிறப்பாக ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான வங்கி நடவடிக்கைகள் வெளிநாட்டுப் பணம் அனுப்பும் வசதிகள், கடன் அட்டை (Credit Card) என்பனவும் வெகு விரைவில் செயற்படுத்தப்படும்.

### புனர்நிர்மாண கடன் வசதி

வெளி நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளி நாட்டு வங்கிகள் மூலம் அரசுக்கு நிதி கிடைத்தால் அரசின் அனுசரணையுடன் புனர்நிர்மாணக் கடன் வசதிகள் மிகக் குறைந்த வட்டியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வங்கி நிதியைப் பயன்படுத்து மிடத்து சந்தை வட்டியை (Market rate) அனுசரித்து மற்றைய வட்டி வீதத்திலும் பார்க்க ஓரளவு குறைந்த வட்டியில் குறிப்பிட்ட ஒரு தொகை ஒதுக்கப்பட்டு கடனாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.




இவையே எமது சமகால எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகும் எனக் குறிப்பிட்டார்.

**வலம்புரியின் வணிக உலாவில் அடுத்த வாரம் வலம்வர இருப்பவர்கள் யாழ் ஹற்றன் நஷனல் வங்கிக் குழுமத்தினர்.**

# தமிழீழ கரும்புலிகள் தின ஏற்பாடுகள் துரிதம்

(நெல்லியடி)

நாளை மறுதினம் தமிழீழமெங்கும் அனுட்டிக்கப்படவுள்ள கரும்புலிகள் தினத்தை ஒட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பகுதியில் அதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கரும்புலிகள் தினக் கூட்டம் 6 வருடங்களின் பின்னர் இடம் பெறவுள்ளதால் அப்பகுதியில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும் வீதிகள் துப்பரவு செய்யப்பட்டும் வருகின்றன.

தவிரவும், புனரமைப்பு செய்யப்பட்ட முதற் கரும்புலி கப்டன் மில்லரின் உருவச்சிலை மேற்படி பாடசா லையில் மீளவும் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ- 247)

# பொறுப்பற்ற சாரதிகள் சட்டத்தின் பிடிக்குள்

(கொழும்பு)

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் முகமாக கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை சட்டத்தின் பிடிக்குள் சிக்க வைக்கும் நடவடிக்கைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ)

## கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

01) 3
02) 2
03) பவித்திரா, கலா.
04) பிட்டு, தோசை.
05) 3
06) 31
07) 75
08) 54
09) 7.2km
10) 2.5km
11) C-F
12) 16.7
13) 20.00
14) குதிரை
15) குதிரை
16) அவமானம்
17) பொருத்தமானவை
18) பொருத்தமானவை
19) ஆறு கடக்கப் பாயவும் வேணும்
20) குண்டு
21) வானொலி தொலைக்காட்சி
22) 5.30
23) பிழை
24) தொலைக்காட்சியில்
25) இன்ரநெற்றில்
26) 47kg
27) 15
28) 10
29) 57
30-34
II X
III X
V X
VII X
VIII X
35) கடற்கரை
36) அடித்தடித்து அழைக்குது
37) ஆகாயத் தோட்டி
38) ஒற்றுமை
39) நரி
40) ஒன்று

# யாழ் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் ஆளணி பற்றாக்குறை

## இதனால் பொது மக்களுடன் வீணே முரண்படும் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மிகுந்த நெருக்கடிகள் மத்தியில் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்கு ஏற்ற விதத்தில் ஆளணியினர் இன்மையில் சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல், திகதிகள் மாற்றம் மற்றும் செய்முறைப் பயிற்சிக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதில் சிரமங்களை அனுபவிப்பதுடன் இதனால் ஏற்படும் கால தாமதங்களால் பொது மக்களுடன் வீணே முரண்பட வேண்டிய நிலை ஏற்படுவதாலும்,

மக்கள் பிரச்சினைகளை உடனுக்குடன் அறிந்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொலைத் தொடர்பு வசதிகள் ஏதும் இல்லையெனவும் சம்பந்தப்பட்ட தரப்பினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை வீதிக் கண்காணிப்புப் பிரிவுப் பொலிஸார் யாழ் குடாநாட்டில் அண்மைக் காலங்களில் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருப்பதை அடுத்து மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றைப் பெறுவதற்கு வாகன உரிமையாளர்கள் பலரும் முண்டியடித்து வருவதும்,

இதனைப் பெறத் தவறுபவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாகுவதும் தெரிந்ததே. (உ-2)

வேலணை சம்பவத்தை கண்டித்து

# நேற்று வன்னியில் ஹர்த்தால் இயல்பு நிலை ஸ்தம்பிதம்

(கிளிநொச்சி)

வேலணையில் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று வன்னியில் கண்டனப்பேரணியும், ஹர்த்தாலும் இடம் பெற்றது.

இக் ஹர்த்தால் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்க அலுவலகங்கள் என்பன இயங்கவில்லை.

போக்குவரத்தும் தடைப்பட்டு இருந்ததுடன் நகரங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. இதே வேளை கிளிநொச்சி அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இது தொடர்பாக மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(உ-9)

# தென்னாசிய அரசியல் சூழலில் ஏற்பட்டுள்ளதான
# சமகாலப் பொருளாதார, இனப்பிரச்சினைகள்

(நேற்றைய தொடர்ச்சி)

மிக நீண்ட காலத்துக்கு பின்னர் பிரச்சினையின் இரு தரப்பும் உடன்பாட்டுக்கு வந்துள்ள அம்சமாகவே புரிந்துணர்வு காணப்படுகிறது. இப்புரிந்துணர்வு போர் நிறுத்தத்தை உருவாக்கியது. ஓரளவு பொருளாதார நெருக்கடியை தணித்தது. அரசியல் மயப்படுத்தலுக்கான உத்வேகத்தை ஏற்படுத்தியது. மொத்தத்தில் வடக்கு-கிழக்கை இலங்கையின் ஏனைய பாகங்களுடன் அரசியல், பொருளாதார, கலாசார, காரணிகளுக்கூடாக இணைத்ததில் புரிந்துணர்வு உடன்படிக்கை வெற்றியை கண்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் உள்ளடக்கம் மிகச் சுருக்கமாக நோக்கப்படுகின்றது.

போர் நிறுத்தம் என்ற தலைப்பின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகளும், இலங்கை அரசாங்கமும், ஆயுத மோதலுக்கு இடைக்கால தடையாக அமைந்ததுடன், இனப்பிணக்குடன் தொடர்புடைய எல்லா ஆயுதக்குழுக்களுக்கும், ஏனைய இனப்பிரிவுகளுக்கும் உரியதான உடன்பாடாக அமைந்துள்ளது. இவ்வுடன்படிக்கையின் கீழ் இரு தரப்பினரும் ஆயுதங்களால் சுடுவதோ, ஆயுதங்களை கைப்பற்றுவதோ, ஆட்களை கடத்துதலோ, ஊடுருவித்தாக்குவதோ, ஆயுதங்களை தொலைத்தழிப்பதோ, மக்களதும் இராணுவத்தினதும் சொத்துக்களை அழிப்பதோ, தற்கொலை மற்றும் அரசியல் படுகொலைகளை மேற்கொள்வதோ, நாச வேலைகளில் ஈடுபடுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது. விமானக் குண்டுவீச்சுக்கா, கடற்படைத்தாக்குதல்கள் உடன்பாட்டின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் 13 ஆவது உபசரத்தின் கீழ் இலங்கை இராணுவத்தினரும் மற்றும் பாதுகாப்பு பிரிவினரும் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளாது இலங்கையின் இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும், தன்னாதிக்கத்தையும் பாதுகாக்கும் உரிமை சட்டரீதியாக உண்டு என்பதை உடன்பாடு ஏற்றுக் கொள்கிறது.

எல்லைக் கட்டுப்பாடு

இருதரப்பினரும் தமது பாதுகாப்பு நிலைகளையும், பரிசோதனை நிலைகளையும் 600 மீற்றர் இடைவெளிக்குள் அமைத்துக் கொள்வதுடன், அவ்வலயத்தினுள் இரு பிரிவினரும் 100 மீற்றர் இடைவெளிக்குள் அசைவதுடன் இருபிரிவினரும் குறைந்தது 400 மீற்றர் இடைவெளிகளை பேண வேண்டுமெனவும் இரு தரப்புக்குமிடையில் 400 மீற்றர் இடைவெளிமட்டும் காணப்படின் 100 மீற்றர் தூரத்திற்கு இருதரப்பும் அசைய முடியாது என்பதை MOU தெளிவாக வரையறுத்துக் கூறுகிறது. இந்த எல்லைக் கட்டுப்பாட்டை கண்காணிப்புக் குழுவினர் நிர்வகிக்கும் அல்லது நிர்ணயிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர் மேலும் பரஸ்பரம் இரு பிரிவினரது கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஆயுதங்களை, வெடிப்பொருள்களை எடுத்துச் செல்லமுடியாது.

18 ஆவது உபசரத்தின் கீழ் தமிழ் பாராளுமன்ற மற்றும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள உடன்பாடு எட்டப்பட்டு 30 நாட்களுக்குள் களைதல் வேண்டும். அவர்கள் ஆயுதப் படையில் சேரும் பட்சத்தில் வட - கிழக்குக்கு வெளியே சேவையில் அமர்த்தப்படுவார்கள் A9 வீதியூடாக ஆயுத மற்ற இலங்கை தரப்புக்கள் உடன்பாடு எட்டிய 60 நாட்களின் பின்பு பயணம் செய்ய முடியும். மேலும் இரு பிரிவினரும் மாற்றுதரப்பின் பிரதேச கட்டளை அதிகாரியின் அனுமதியுடன் ஆயுதமின்றி சிவில் உடையில் மறுதரப்பின் பிரதேசத்திற்குள் செல்லலாம். A9 வீதியை பாவிக்கும் உரிமை விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டாலும், விசேட இராணுவப் பிரதேசத்தினுள் பரஸ்பரம் இரு பகுதியினரும் வேறு பிரிவினரின் அனுமதியை தடுக்கலாம். குறிப்பாக 1.13 ஆவது உபசரத்தில் விசேட இராணுவப்பிரதேசத்துக்குள் வேறு பிரிவினரை அனுமதிக்காது தடுக்கும் உரிமை அரசாங்கத்துக்குரியது. மேலும் உடன்பாடு எட்டப்பட்டு முதலாம் மாதம் 50 ஆயுத மற்ற விடுதலைப் புலிகளும்60 நாட்களுக்கு பின்பு 100 விடுதலைப் புலிகளும் 90 நாட்களுக்கு பின்பு ஆயுதமற்ற அனைத்து விடுதலைப்புலிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசிக்கலாம். அவர்கள் அரசியல் வேலைகளில் தம்மைஈடுபடுத்திக் கொள்ளலாம்.

கே. ரி. கணேசலிங்கம்
விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

வழிபாட்டிடங்கள்

சுமூக நிலையை உருவாக்குதலென்ற தலைப்பின் கீழ் இரு பிரிவினரும் சர்வதேச சட்டத்திற்குட்பட்ட நிலையில் பொது மக்களுக்கு எதிரான பகைமை நடவடிக்கைகளை தவிர்த்தல், சித்திரவதை சடத்தல், பயமுறுத்தல்பலாத்காரத்தின் மூலம் பணியவைத்தல், தொல்லை கொடுத்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட முடியாததுடன் மேலும் இரு தரப்பும் மத. கலாசார ரீதியான உணர்வுகளைதூண்டும்வகையில் நடவடிக்கையில் ஈடுபடமுடியாததுடன்மேலும் 2.2 உபசரத்தின் படி இருபிரிவினரும் வழிபாட்டிடங்கள் மற்றும் புனித பிரதேசங்களிலிருந்து 30 நாட்களுக்குள் பொதுமக்களின் பாவனைக்காக அனுமதிக்கும் வகையில் வெளியேறுதல் வேண்டும். மேலும் அதியுயர் பாதுகாப்பு பிரதேசத்திலுள்ளவழிபாட்டு பிரதேசங்களிலிருந்தும் வெளியேறுவதுடன், பொதுமக்களின் பாவனைக்குட்படுத்தாது விடினும் அவர்களின் சௌகரியத்துக்கும் அபிலாசைக்கும் அனுமதியளித்தல் வேண்டும் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் கால எல்லை 160 என உடன்படிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது

இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கு அனுப்பப்படும் பொருட்கள் தொகுதிக்கான கேள்வியின் அளவைப்பொறுத்ததாக அமைவதுடன் அடிக்கடி அவ்வாறு கைமாற்றப்படும் இராணுவத் தேவைக்கு அப்பால் பட்ட பொருள்களைஇலங்கை அரசாங்கம் மீளப்பரிசீலனை செய்வதற்கான உரிமையை உடன்படிக்கை வழங்கியுள்ளது.

உபசரத்து 2.11இன் பிரகாரம் மீன்பிடி மேற்கொள்ள விதிக்கப்பட்ட நிபந்தனைகள் விளக்கமளிப்பதுடன் இரவிலும், பகலிலும் மீன் பிடிப்பதற்கான அனுமதி உடன்பாடு எட்டப்பட்ட90 நாட்களுக்குள் அனுமதியளித்தல் வேண்டும். ஆனால் இராணுவப் படைமுகாம்களிலிருந்து ஒரு கடல்மைல் தூரம்(6080) அடி அனுமதி வழங்கப்படாது என்பதுடன் இரண்டு கடல் மைல் தூரத்திற்குள் கடற்படைப் படகுகள் பயன்படுத்த முடியாது. மேலும் இறங்கு துறைகள் குடாக்கடல் பகுதிகள்என்பனவற்றில் மீன்பிடிப்பதற்கான தடை விலக்கப்படாது எனவும்கூறப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும் உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 4.3 உபசரத்தின் கீழ் உடன்படிக்கையில் திருத்தம் கொண்டுவர வேண்டுமாயின் கண்காணிப்புக் குழுவிடம் எழுத்துமூலம் இரு பிரிவினரும் பிரேரணைகள் அளித்தல் வேண்டும். 4.4 உபசரத்தின் கீழ் ஏதாவது ஒரு பிரிவினர் உடன்படிக்கையிலிருந்து விலகுவதாக கருதினால் 14 நாட்களுக்கு முந்திய எழுத்துமூலமான அறிவிப்பினை நோர்வே அரசாங்கத்துக்கு வழங்குதல் வேண்டும்.

பிரதமர் ரணில்

எனவே புரிந்துணர்வு உடன்படிக்கையின் உள் நோக்கங்களை பருமட்டாக நோக்கும் போது, ஆபத்து மிக்கதென்று தமிழ்த்தரப்பின் எச்சரிக்கை முதல் கருதுகோளாக அமைகிறது. புரிந்துணர்வின் பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுக்கும் நடவடிக்கைகள் அவரது அரசாங்கத்திற்கும் அவர்சார்ந்த நாட்டுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தினாலும் தமிழர்களையும் அவர்களது பிரதேசத்தையும் கலாசாரத்தையும் பொருளாதார வளங்களையும் சூறையாடுவதற்கானபின்தளமாகவே புரிந்துணர்வு பயன்படுத்தப்படுகிறது போல் தென்படுகிறது. அத்தகைய பின்தளத்திலிருந்து உத்வேகமான தேசிய பற்றுதலை உடைத்து மக்களையும் போராட்ட அமைப்பையும் அதனோடு உறுதுணையான சக்திகளையும் முரண்பட வைப்பதையே நோக்கமாக கொண்டு உடன்படிக்கையும், பிரதமர் ரணிலும் செயல்படுவது தெளிவாக தெரிகிறது. அவர் தனக்கு துணையாக இந்தியர்களை மட்டுமல்ல அமெரிக்கர்களையும் சீனர்களையும் துணைக்கு வைத்திருக்கின்றார். புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வெளியேயுள்ள தடைகளை சுருக்கமாக நோக்குவோம்.

● இலங்கையின்அரசியல்திட்டத்தின்கீழ் நிலைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி உடன் படிக்கையில் ஒப்பமிடாதநிலையிலும்2/3பெரும்பான்மையை எட்டமுடியாத ஐக்கிய தேசிய முன்னணியும் கொதித்தெழும் ஜனதா விமுத்தி பெரமுன, சிங்கள உறுமய, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் சில பௌத்த துறவிகளின் ஒத்துழைப்பும் 'செல்' அரித்த காவோலைக் கட்டுகள் போல் புரிந்துணர்வுடன் படிக்கை வலுக்குன்ற செய்துவருகின்றன.

● ரணில் விக்கிரமசிங்காவின் ராஜதந்திரம் சந்திரிக்கா ரணில் இருவரது கருத்தியல் இணைவும் புதிய கோணத்தை ஏற்படுத்தக் கூடியது, இடைக்காலநிர்வாகம், புலிகள் தடைநீக்கம், பேச்சுவார்த்தை என்ற மூன்றும் முன்னுக்கு பின் முரண்பாட்டை உருவாக்க ஆரம்பித்துள்ளது.

● இந்திய நிலைப்பாடும் அரசாங்கத் தலைமைகள் இந்தியாவுக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கொண்டுள்ள முரண்பாடும் நீண்டகால நோக்கில் இந்தியர்கள் எதிர்பாக்கும் நலனும் ஆபத்து மிக்க முடிவுகளுக்கு புரிந்துணர்வு உடன்பாட்டை இட்டுச் செல்லக் கூடியதாக அமைந்து விடலாம் என்ற அச்சுறுத்தல் உறுதிப்படுத்தப்பட்டுவருகிறது.

● புரிந்துணர்வை மீறும் அரசாங்கப் படைகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை நிராகரிக்கும் இராணுவத்தின் போக்கும் நெருக்கடியாகவே அமைகிறது. இருதரப்பும் பரஸ்பரம் குற்றஞ் சுமத்தும் அதேவேளை போருக்கு தயாராவது துல்லியமாக தெரிய வருகிறது. சர்வதேச நெருக்குவாரமும்பொருளாதார வீழ்ச்சியுமே விடுதலைப் புலிகளின் இராணுவ பரிமாணமுமே சமகாலப் போக்குக்கு வழி சமைத்தது என்பதை நாம் கணக்குப் போட தவறக் கூடாது.

பலஸ்தீன விடுதலைப் போராட்டம்

உலகம் புரிந்து கொண்ட ஒரு விடயமே பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் அது எதிர்கொண்டு வரும் நெருக்கடியும். 1947களின் பின்னர் ஏற்பட்ட அரபு இஸ்ரேலிய போர்கள்பலமானகட்டமைப்பைக் கொண்ட உலக நாடுகளாலேயே வியக்க வைக்கும் தலைமையையும் கொண்ட இயக்கமாக பலஸ்தீன விடுதலை இயக்கம் 1990கள்வரை விளங்கியது 1993ஆம்ஆண்டு காஸா-ஜெரிக்கோ உடன்படிக்கை ஒன்று நோர்வேயின் முயற்சியால் (ஒஸ்லோ உடன்படிக்கை என்றும் அழைப்பர்) எட்டப்பட்டது. அப்போது யசீர் அரபாத் உடன்பாடு அவசியமானது என்ற உணர்வுக்கு வந்திருந்தார். அதற்கு வித்திட்டது 1979செய்யப்பட்ட காம்டேவிட் உடன்பாடு ஆனால் காஸா-ஜெரிக்கோஉடன்படிக்கைக்கு பின்னர் பலஸ்தீனர் மீதான அடக்குமுறை அதிகமானது. ஹமாஸ் எழுச்சி தவிர்க்கமுடியாததாகியது. அதன்வளர்ச்சி அரபாத்தையும் P.L.O வையும் முடிவுக்கு கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வுடன் பாட்டின் நடைமுறையின் இறுதி வடிவம் 1998ஆம் ஆண்டாக இருந்தது. ஆனால் முதலாவது சரத்துக்கூட சரிவர கடைப்பிடிக்க முடியவில்லை, இதனால் 1999இல்'வைநதி' உடன்படிக்கை ஒன்று அமெரிக்க முன்முயற்சியால் செய்யப்பட்டது. தற்போதைய அமெரிக்க அதிபர் வில்லியம் புஷ் தான் உலகில் வெறுக்கும் மனிதர்களில் ஒருவராக அரபாத் இருக்கிறார் என்பதன் தந்திரோபாயத்தை புரிந்து கொள்ளுதல் நன்று.

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் அழிவுக்கு வித்திட்ட ராஜதந்திரம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உண்டா என்ற சந்தேகம்வலுவடைகிறது. ராஜதந்திரத்தை ராஜதந்திரத்தால் தான் வெற்றி கொள்ள வேண்டும். தடைகளைத்தாண்ட புத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிவாவின் அஞ்சலிக் கூட்டம்

(மந்திகை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 31 வது நாள் அஞ்சலி கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விக்னேஸ்வராக்கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில்நடை பெறவுள்ள நிகழ்வில் கூட்டணி பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர். (உ-23)

## 10 ஆம் திகதி வரை விபரங்களை வழங்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு இவ்வாண்டு அனுமதி கிடைத்தும் போதிய விபரங்களை விளக்கமாகக் கொடுக்கத் தவறிய காரணத்தினால் இடை நிறுத்தப்பட்ட 23 பேரையும் இம்மாதம்10ஆம் திகதிக்கு முன்னர் சரியான விபரங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு வழங்கி தமது அனுமதியை உறுதிப்படுத்துமாறு யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திருமதி நாகேந்திரராணி அறிவித்துள்ளார். (உ-19)

## இராசி பலன்

03-07-2002
(ஆனி 19 புதன்)
அட்டமி ந.ப 12-01வரை
ரேவதி பி.இ 1.45வரை
இராகுகாலம் 11.57-1.27
நல்லநேரம் 4.27-5.57

**மேடம்**
புதியதிட்டமிடல், தொழில் சிறப்பு, வாக்குமேன்மை, பெரியோர்ஆதரவு

**இடபம்**
வீண்பிரச்சினை, பிரயாணம், காரியதாமதம், செல்வாக்குக்குறைவு

**மிதுனம்**
காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, மனக்கிலேசம், போசனசுகம்

**கடகம்**
நினைத்தகாரியம் கைகூடும் அலைச்சல், மனக்கட்டுப்பாடு வீண்பிரச்சினை

**சிங்கம்**
பணவரவு, செல்வாக்கு பொருள் சேர்க்கைஅதிகாரம்

**கன்னி**
பிரயாணம், வாக்குமேன்மை, தாய்வழிஉறவு, சகோதரர்உதவி

**துலாம்**
தொழில்பிரச்சினை, கௌரவக்குறைவு, தெய்வசிந்தை நல்லசெய்தி

**விருச்சிகம்**
இனசனக் கொண்டாட்டம் ரோகபயம், சயனசுகம்

**தனுசு**
உடல்உபாதை, கற்பனை மிகுதி, மாதர்நட்பு, வீண்பிரச்சினை

**மகரம்**
உணர்ச்சிவசப்படல், நித்திரைச்குழப்பம், அபூர்வசந்திப்பு

**கும்பம்**
புதிய பொருள் வருகை, உடல்வியாதி, இலட்சுமிகரம் அலைச்சல்

**மீனம்**
மாதர்சிந்தை, எடுத்த காரியம்நிறைவேறும், நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

குறள்

வலம்புரி

## யாழ் ஆயரின் அரும்பணி

யாழ். மறைமாவட்டத்தின் ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பதவியேற்று 10 வருடங்கள் நிறைவடைகின்றன.

திருச்சபையின் இறையாட்சியில் ஆயர் பதவி என்பது இறைவனின் திருவருள் கட்டளை என்றே கூறலாம். புனிதமான பதவியை புனிதமாகப் பேணிய பெருந்தகை யாழ். ஆயர் அவர்கள்.

அவர் தனது ஆயர் பணியில் பத்து ஆண்டுகளை நிறைவு செய்கிறார் என்பது முக்கிய அம்சமாக இருக்கும் அதே வேளை அவர் ஆயராக இருந்த காலம் எத்தகையதென்பதை நோக்குவதும் அவசியமாகும்.

யுத்தமும் இடம் பெயர்வும் நிறைந்த காலமாக மக்களை ஆற்றுப்படுத்தி உண்மைத் தத்துவத்தை உணர்த்த வேண்டிய காலமாக இருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரை கடந்த பத்து ஆண்டுகளில் யுத்தத்தின் கோரதாண்டவம் மிக மோசமாக இருந்தது. இக்காலத்தில் ஆயர் அவர்களின் பணி வரலாற்றில் பதியப்பட வேண்டியவை. தனக்கு இருக்கக் கூடிய சமயப் பணி என்பதைக் கடந்து மக்கள் பணிஎன்பதற்குள் தன்னை ஈடுபடுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர் கொடுத்த குரல் தமிழினத்தால் ஒரு போதும் மறக்கப்பட முடியாதவை.

சமய நிலை கடந்து தமிழினம் என்ற பார்வையில் அவர்கொடுத்தகுரல்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியதென்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

யாழ். மறை மாவட்ட ஆயர்களின் வரிசையில் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் கத்தோலிக்க மக்களால் மட்டுமன்றி சைவ சமயத்தவர்களாலும் போற்றி மதிக்கப்பட்டவர். அதேபோல் ஆயர் அவர்களும் தான் சார்ந்த சமயம் என்றவரையறைகள் நின்றுவிடாமல்சைவ சமயத்தின் மதத் தலைவர்களையும் கௌரவப்படுத்துவதில் - முன்னிலைப்படுத்துவதில் பின்னின்றதில்லை. இவை காரணமாக சைவ - கத்தோலிக்க மக்களிடையே ஓர் இணக்கப்பாடு ஒற்றுமை என்பன ஏற்பட்டன.

# பிரதமர் ரணிலின் சமாதான முன்னெடுப்பு தமிழீழத்திற்கான முதல் சந்தர்ப்பம்

## தடுத்து நிறுத்த ஒன்றுபடுமாறு வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

அரசு- புலிகளிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம் அல்ல தமிழீழத் திற்கான முதல்சந்தர்ப்பம்.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த அனைத்து இன மக்களும் ஒன்றுபடாவிட்டால் தமிழீழத்திற்கான முதலாவது சந்தர்ப்பமாகவே இது அமையும்.

ஜே. வி. பி.யின் முக்கிய தலைவர்களில் ஒருவரான விமல் வீரவன்ச கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் மேலும் அவர் கூறியிருப்பதாவது.

புலிகள் மீதான தடை நீக்கத்தை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தியதன் பிரகாரம் அவர்கள் இது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

அத்துடன் அரசின் பொருளாதார செயற்பாடுகள் குறித்து நாம் வன்மையாக எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றோம்.

வடக்கு-கிழக்கைப் பிரித்து விடுதலைப் புலிகளிடம் கையளிக்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டை எதிர்க்கும் பல ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்புக் கூட்டங்களையும் நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது, அதாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் உத்தியோக பூர்வ மற்ற செய்தித் தணிக்கையின் காரணமாக முன்னரைப் போல் எமது கருத்துக்களுக்கு, செய்திகளுக்கு ஊடகங்களில் இடமளிக்கப்படுவதில்லை.

இதனால் எமது செய்திகள் கருத்துக்கள் இருட்டடிப்புச், செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

அரசின் ஆட்சேர்ப்புத் தொடர்பாக கருத்துக் கூறுகையில்,

ஜனநாயக குடியரசுள்ள அரசாங்கம் ஒன்று அதன் படைகளுக்குப் பயிற்சியளிப்பது ஆட்களை சேர்ப்பதென்பது வழமையானது.

இந்த நடைமுறையை சர்வதேச சமூகம் மாற்றுக் கருத்துக்களின்றி ஏற்றுக் கொள்ளும். ஆனால் அரசாங்கப் படைகளைத் தவிர்ந்த ஏனைய ஆயுதம் தாங்கிய குழுக்கள் படைகளென ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றார். (உ)

# முஸ்லிம்களின்இருப்பை உறுதிசெய்யும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மீளாய்வு

## பிரதமரைச் சந்தித்து அமைச்சர் ஹக்கீம் கோருவார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில அம்சங்களை மீளாய்வுசெய்யுமாறு பிரதமரிடம் கோரப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வாழைச் சேனை அல்லூர் தேசிய பாடசாலையில்நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில்உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்;

வாழைச் சேனையிலும்கல்முனையிலும் மக்களுடன் கருத்துப் பரிமாறிய பின்னர் கொழும்புதிரும்பிபிரதமரைச் சந்தித்து உண்மை நிலையை விளக்கவுள்ளதுடன்,

வடகிழக்கில் அனைத்துப் பிரதேசங்களிலும் முஸ்லிம்களின் பாதுகாப்புசரிவரஉறுதிப்படுத்தப்படவேண்டுமென பிரதமரைக் கோரப் போவதாகவும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களும் ஒரு தரப்பினராக கலந்து கொள்வதற்குரிய வாய்ப்பை பல வீனப்படுத்தும் சதிமுயற்சிகளே தற்போது நடைபெறுகின்றன.

இதனால் முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. அடுத்த சந்ததியினரின் இருப்பு பற்றி சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-9)

## கிழக்கு பல்கலை மாணவர்களின் முத்தமிழ் நிகழ்வுகள் யாழ். பல்கலையில்

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆற்றுகைகளான இராவணேஸ்வரன் நாடகம் மற்றும் 'கிழக்கிசை' நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழகத்திலும் மேடையேற்றப் படவுள்ளன.

இராவணேஸ்வரன் நாடகம் மற்றும் பாரம்பரியமான தமிழ் இசைக் கருவிகளைக் கொண்டு ஆற்றுகை செய்யப்படும் 'கிழக்கிசை' ஆகியன நாட்டின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## வெளிநாடுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் குழு நாளை யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

வட அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகியநாடுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று நாளை வியாழக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

இக் குழுவினர் யாழ் செயலக கேட்போர் கூடத்தில் மு.ப 11 மணிக்கு அரச அதிபர் க.சண்முகநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

குறுகிய கால பொலிஸ் உதவிகள் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் பிரதேச செயலர்கள் செயலக உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத குருமார் ஆகியோருடன்இவர்கள் கலந்துரையாடவுள்ளனர். (ஷ-6)

## பேச்சுக்கு முன்பதாக அமைச்சர்கள்-புலிகள் மட்டத்தில் பேச்சு

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் சமாதானப்பேச்சுவார்த்தைக்கு முன்பதாக அரசஅமைச்சர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இதன்மூலமே விரைவான அரசியல்தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியுமென அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்குகிழக்குப் பிரச்சினைக்கு விரைவான அரசியல் தீர்வினைக்கருதி அமைச்சர்கள் மட்டத்திலான இந்த சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அந்தவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## தினசரி தியானம்

### அரை மணி நேரம்

காலமே காலமொடு மூன்றுங் காட்டும்
காரணமே காரண காரியங்கள் இல்லாக்
கோலமே எனைவா வாஎன்று கூவிக்
குறைவற நின் அருள் கொடுத்தாற் குறைவோ
சொல்லாய்.

- தாயுமானவர்

பரம் பொருளே, பரிபூரணத் தன்மையில் நான் முன்னேற்றம் அடையுமளவு எனது குற்றங்கள் குறையும்; துன்பங்கள் தொலையும். நான் பரிபூரண நிலையை நாடியிருப்பேனாக.

நல்வாழ்வுக்காக என்று நாள் தோறும் அரைமணி நேரம் ஒதுக்கிவை. உயர்ந்த பாங்கைப்பற்றி எண்ணிப் பார். பின்பு அதைப் பழக்கத்தில் கொண்டுவர முயலுக. ஆற்றலும், நல்லறிவும் உண்டாவதற்கு இதுவே உற்ற உபாயம். அவசரம் வேண்டாம்; உன் கடமையை ஒழுங்காகச் செய். கட்டுப்பாடும், சுயநலத்தியாகமும் வடிவெடுத்தவன் ஆவாயாக.

- ஸ்ரீமத்சுவாமிசித்பவானந்தர்

## தீவக அரசியல் பணிமனை வேலணையில் திறப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிக்கான தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைக் கோட்டச்செயலகம் நேற்று மு.ப10:30மணியளவில் வேலணைகிழக்கு பெருங்குளம் முத்துமாரியம்மன் வீதியில் திறந்துவைக்கப் பட்டது

அதிபர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச் சுடரினை மாவீரர்களின் பெற்றோர்களும் தமிழீழ நிர்வாகத் துறைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரனும் ஏற்றிவைத்தனர்

தமிழீழத் தேசியக்கொடியினை விடுதலைப்புலிகளின் அரசியல்துறை உறுப்பினர் அருணன் ஏற்றிவைக்க பெயர்ப்பலகையினை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் திரைநீக்கம் செய்துவைத்தார்

இதனைத்தொடர்ந்து அரசியல் அலுவலகத்தை நெடுந்தீவு - ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தளபதி பாப்பா, தீவக அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம். கே. சிவாஜிலிங்கம், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (த-75)





ஜேர்மன் வான் பரப்பில் நேருக்கு நேர் மோதிச் சிதறுண்ட விமானங்களின் பாகங்களையும், விமானம் விழுந்த இடத்திலுள்ள கட்டிடங்கள் தீப்பற்றி எரிவதையும் படங்களில் காணலாம்.

## ஜேர்மன் வான் பரப்பில் பெரும் அனர்த்தம்

# பயணி - சரக்கு விமானங்கள் நேருக்கு நேர் மோதிச் சிதறின!

## 52குழந்தைகள் உட்பட 71பேர் பலி

(பேர்லின்)

**ஜேர்மனிய வான்பரப்பில் இரண்டு விமானங்கள் சுமார் 12ஆயிரம் அடி உயரத்தில் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் சுமார் 71பயணிகள் பலியாகியுள்ளனர். பலியானவர்களில் ரஷ்யாவைச் சேர்ந்த 52குழந்தைகளும் அடங்குவர்.**

விமான விபத்து நடைபெற்ற இடத்திலுள்ள கட்டடங்கள் தீப்பற்றி எரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மொஸ்கோவில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு இத்தாலிக்குச் சென்ற ரஷ்யப் பயணிகள் விமானமும், பொருட்களை ஏற்றிக்கொண்டு இத்தாலியில் இருந்து சென்ற போயிங் 857ரக விமானமுமே ஜேர்மனின் தென்பகுதி வான்பரப்பில் மோதிக்கொண்டன.

இந்த விமானங்களின் சிதைவுகள் சுமார் 30கிலோமீற்றர் தூரத்துக்கு சிதறிக்கிடக்கக் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமான விபத்தின் போது பலியானவர்களில் 11பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலும் சடலங்களை மீட்கும் பணி துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விபத்துக்குள்ளான சரக்கு விமானத்தில் உள்ள கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டிருப்பதாகவும் அதன் மூலம் விபத்துக்கான காரணங்கள் அறிய வரலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-09)

### வடக்குக் கிழக்கில்...

ஒதுக்கியுள்ளதுடன் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மூடப்பட்ட இராணுவ முகாம்களுக்குப் பதிலாக புதிய இராணுவ முகாம்களை அரசு வடக்குக் கிழக்கில் அமைத்து அவற்றைப் பலப்படுத்தி வருவதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

### விசாரணை நடத்த...

இந்த விமானப் பாகங்களை இலங்கை ஊடாக இந்தியாவுக்குக் கொண்டுசெல்ல முற்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவே இவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (த)

### தமிழ்ச்செல்வன்...

தொடர்பாளர் பிரான்ஸிஸ் ஆகியோரும்,

விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல்த்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

கிளிநொச்சி நடுவப்பணியகத்தில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழீழக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் அத்துமீறல்கள், கிழக்கு மாகாணத்திலுள்ள புலிப்போராளிகளுக்கான கடற்போக்குவரத்து ஆகியவை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

நேற்றுக்காலை 9.30மணிக்கு ஆரம்பமான பேச்சுவார்த்தை நண்பகல் 12.30மணிவரை நீடித்தது.

கண்காணிப்புக்குழுவினர் நேற்றையதினமே கொழும்பு திரும்பினர். (வ)

## கோப்பாய் கோட்ட அதிபர்கள் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி.ப2.00மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-79)

### கிளிநொச்சியில்...

செய்யப்பட்டிருந்தது..

இப்பேரணி நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி உதிரவேங்கை வைரவர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமானது.

இம்மாபெரும் கண்டனப் பேரணியில் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் முழு அளவிலான உருவப்படத்தை மாணவர்கள் தாங்கிக்கொண்டு முன்னே செல்ல அவர்களைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கோஷங்களை எழுப்பியவாறு பின்னே சென்றனர்.

இப்பேரணியின் இறுதியில் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. (வ)

### செங்கலடி...

இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர்மௌலானா மற்றும் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய சிறப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன், மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் விசு ஆகியோருக்கிடையில் மட்டக்களப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பேச்சுக்களின் போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. (த)

### ஊர்காவற்றுறை...

பதில் நீதவான் மு.திருநாவுக்கரசின் உத்தரவின் பேரில் மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் இன்று மல்லாகம் நீதிமன்றில் நடைபெறும் என நீதிபதி மு.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். (ந-6)

### புலிகளின் குரல்..

செயல்வீரனின் இசையமைப்பில் யாழ், வன்னிக்கலைஞர்கள் இணைந்து வழங்கும் மாபெரும் 'இசை விருந்து' என்பனவும் 'இடம்பெறவுள்ளது.

புலிகளின் குரல் மாதாந்த முத்தமிழ் கலையரங்கின் சிறப்பு நிகழ்வாகவும் இது அமையவிருப்பது. குறிப்பிடத்தக்கது. (ந)


## லாலாவின் பாராட்டுக்கள்

யாழ் ஆயராகி 10 ஆண்டுகள் தமிழ் மூத்த தலைமுறை மட்டுமல்ல; தற்பொழுதுள்ள இளைய தலைமுறைகளின் நெஞ்சங்களில் அழியாத இடம்பெற்றுக் கொண்டிருக்கும் எங்கள்



தந்தை
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை அவர்கள்.

வயது முதிர்ந்த வேளையிலும் அளப்பரிய சேவையாற்றி எவராலும் நேருக்கு நேர் போய்ப் பார்க்க முடியாத பேச முடியாத ஒரு சில தலைவர்களை தனது அயராத முயற்சியினால் போக முடியாத இடங்களுக்குப் போய் சந்தித்து அரவணைத்து உரையாடி தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்களையெல்லாம் எடுத்து விளக்கி அவர்களின் விடிவுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார்.

தமிழ் மக்களின் இதய தெய்வமாகிய தந்தை அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றுத் திகழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்ளும் அதேவேளை அவரைப் பாராட்டுவதோடு மட்டுமன்றி அவருக்கு என்ன உதவிகள் தேவையோ அவற்றைச் செய்து கொடுக்க எனது நிறுவனம் என்றைக்கும் தயாராகக் காத்திருக்கின்றது. மேதகு தந்தை அவர்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டுமென்று பாராட்டி வாழ்த்திக் கொண்டே இருக்கும்;

உரிமையாளர்,
லாலா சோப் ஸ்தாபனத்தார்,
அச்சுவேலி

(C/4608)



**விஞ்ஞான பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை**

## அறிவித்தல்

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினது கீழ்காணும் அரையாண்டுப் பரீட்சைகள் 15.08.2002 ஆம் திகதி ஆரம்பமாகும்.

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு (இரண்டாம் அரையாண்டு) - 2002
விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு (இரண்டாம் அரையாண்டு) - 2002
விஞ்ஞானத்தில் மூன்றாந் தேர்வு (முதலாம் அரையாண்டு) - 2002

மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி விண்ணப்பப்படிவத்தினை உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் 20.07.2002 ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி விண்ணப்ப படிவங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பரீட்சைகளின் போது தோற்றக்கூடிய பரீட்சை அலகுகளின் விபரத்தையும் நேரசூசியையும் விஞ்ஞான பீட அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர் [C/4609]





எம். டி. குணசேன
**மாபெரும் புத்தக விற்பனை!**

இன்று முதல் 6ம் திகதி வரை
யாழ். பல்கலைக்கழக நூலக
கேட்போர் கூடத்தில்

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்
**திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை** தலைமையில்
பிரதம விருந்தினர்
**திரு. சி.இளம்பரிதி**

சமயத் தலைவர்கள், துறைத்தலைவர்கள், நிர்வாகிகள், கல்வியாளர்கள், படைப்பாளிகள், நூலகர், கலை இலக்கிய ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

*மருத்துவம், அறிவியல், கணனி இயல், தமிழியல், தொழில்நுட்பம், குழந்தை நூல்கள், கலைக் களஞ்சியம், அகராதி, ஆங்கில, தமிழ் இலக்கண நூல்கள்*

அனைத்தும் 10% கழிவில்!

*அனைவரும் வருக!*

[C/4607]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.